விலை : 20.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித நாபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(த-1212)

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 தை 01 ஞாயிற்றுக்கிழமை (14.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 026

## அமெரிக்க தூதுவரை சந்தித்த வட.முதல்வர்



31

## வட்டக்கச்சியில் கசிப்புடன் மூவர் கைது



(மல்லாவி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் காவலரண பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் 5 ஆம் 32

## சுமந்திரன் ஒரு தேசத்துரோகி

# மண் அள்ளித் தூற்றி

# கதறி அழுத தாய்மார்

(வவுனியா) பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு தேசத்துரோகி எனத் தெரிவித்தும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் உருவப்படங்களுக்கு மண்ணை அள்ளித் தூற்றியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கதறி அழுது ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர். (31-ம் பக்.)




அன்பு வாசகர்கள் அனைவருக்கும் தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
- வலம்புரிக் குடும்பம்

## வவுனியாவிலும் விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்கள்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று பிற்பகல் அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு 31

## தேர்தலுக்கு பின்னர் அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் அதிரடி மாற்றங்களை முன்னெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால 31

## ராஜபக்ஷவை பாதுகாக்கும் நல்லாட்சி அரசாங்கம்!

### புத்திஜீவிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஒன்றிணைந்து ராஜபக்ஷக்களை காப்பாற்றுவதாக நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்றபாடுபட்ட புத்திஜீவிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற விடயங்களை வெளிக்கொண்டுவருவதாக மக்க 31

## 37-வது ஐ.நா கூட்டத் தொடரில் இலங்கை மீது கடும் அழுத்தம்

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் வெளிப்படுத்துவார்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் 37 ஆவது கூட்டத்தொடரின் போது தாமதமாகிவரும் இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறிமுறை விடயம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் அதிருப்தியை வெளிப்படுத் 31

## தமிழ் மக்கள் பேரவையின் விசேட கருத்தரங்கு வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 16-ம திகதி மாலை 4 மணிக்கு நடைபெறும் விசேட கருத்தரங்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் விசேட உரையும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் என தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.(ம)

## அடுத்த வாரம் புதிய ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் 31

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress
(த-7545)

THE FIRST TIME
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக 10 அடி அகலம் கொண்ட அதி நவீன துல்லியத்தில்
8 கலர்ஸ் டிஜிற்றல் பனர் பிறின்டிங்
01 சதுர அடி
28/=
Photo Quality Printing
(C-1206)



Normal Sticker - 65/=
Cleyar Sticker - 70/=
Backlit Banner - 65/=
One Way Vison Sticker - 170/=
Febric - 80/=
Minimum Sqf-100
MUG PRINT 250/=
Name Boards - 190/= // Light Board - 400/=
இச்சலுகை 15.01.2018 தொடக்கம் 31.01.2018 வரை மட்டுமே...
உங்கள் விளம்பர பதாகைகளை ஒளிமயமாக்கிடுங்கள்...
ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
இல.246 கன்னாதிட்டி சந்தி யாழ்ப்பாணம் (மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
0770731654, 0712115533, 0717774556, 0212213233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

சித்தன்கேணி, கலைநகர் சிற்பசிகாமணி, கலாபூஷணம்

## சீனிவாசகம் செந்தூர்ராசா

(கலைநகர் காங்கேயம்பதி முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவலர்)

மலர்வு 1940 - 09 - 29



உதிர்வு 2018 - 01 - 12

சித்தன்கேணி கலைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் செந்தூர்ராசா 2018.01.12 வெள்ளியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-தையல்முத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், குமுதவல்லி, வசந்தவல்லி, விஜியவல்லி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மசிவம், இன்பவதனன் (சிற்பச்சக்கரவர்த்தி), சதானந்தராஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேசமலர், சிறீராஜமூர்த்தி (ஒய்வூதியர்), வதனராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளானந்தசிவம் (சிற்பஞான பண்டிதர்), சிவஞானமணி, அமரர் பகரசிங்கம், அமரர் அருமைநாயகம், குகானந்தராசா, பரமேஸ்வரி, புனிதபுஸ்பம், முத்துச்சிவராசா (பிரான்ஸ்), மகமாரியம்மா, பவளம்மா, அமரர் சச்சிதானந்தன், சிவஞானபோதலிங்கம், கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கேந்திரேசன் (ஆய்வுகூட உத்தியோகத்தர்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), திலகரேசன் (பிரான்ஸ்), வினிஜா, பேரீசன், அமரர் சஞ்சீவன், டிலக்சனா (அமெரிக்கா), சயந்தா (அமெரிக்கா), கேசினி (அமெரிக்கா), லக்சியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2018.01.15 திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொற்கைத்துறை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
சித்தன்கேணி. (சி-1213)

-குடும்பத்தினர். 0779790821, 0779043660, 0212250896


## இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

வீடுகளுக்கான கூரை ஓடு வகைகள், தட்டோடு, ரோம் ஓடு, மோட்டு ஓடு, செங்கற்கள், பொலிசிங் கற்கள், சிக்கன அடுப்புகள், மண் அடுப்புகள், மட்பாண்ட வகைகள் போன்றவை விசேட விலைக்கழிவுகளுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

நந்தி, கொக்கு, ஸ்டார், தேனீ மார்க் ஓடுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு

**சுந்தரமூர்த்தி & சன்ஸ்**

பிரபல ஓடு வியாபாரம்

ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி யாழ்ப்பாணம். (சி-1209)

தொடர்புகளுக்கு:- 0774248753



## SIVARUBINI MOTORS

BAJAJ

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் மலிவாக பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

டேவிட் பீரிஸ் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்



அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட விலைக்கழிவு

SIVARUBINI MOTORS
சிவரூபினி மோட்டர்ஸ்
021-222 2141, 077 923 4756

(C-1208)



50,000/- முதல் ஒரு இலட்சம் வரையான வருமானத்துடன்

## 1000 கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்



டுபாய், கட்டார், குவைத், சவுதி, மாலைதீவு, மலேசியாவில், ஹொட்டேல் வேலைகள் மற்றும் Salesman, Accountant, Driver, Electrician, Engineer உட்பட பல வேலைவாய்ப்புக்கள்

ஜேர்மன் AIDA உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு

சிங்கப்பூரில் ஹொட்டேல் பயிற்சியுடன் வேலை

மேலதிக விபரங்களுக்கு: 0777 324 004 077 36 16 798

9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
Tel: 021 222 0011 www.sikaram.lk (சி-1203)



## பிரத்தியேக குழு வகுப்புக்கள்

**A/L கணக்கீடு (2018, 2019, 2020)**

வணிகக்கல்வியும் கணக்கீடும் - Grade 11, 10

KBK ACCOUNTING CENTRE

கொழும்புத்துறை (Sat & Sun- 2-8 P.M) | கந்தர்மடச்சந்தி (Tue, Fri- 4-7P.M)

வகுப்புக்கள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறுகின்றது

**Mr.BALAKAJEN**

B.com (Jaf),H.N.Dip.in.Acc (ATI), Dip-in-Edu (OUSL), M.Com (Acc)

T:P- 076 565 5956



## வாடகைக்கு

திருநெல்வேலிக்கு அண்மையில் இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு மற்றும் நவீன முறையில் அமைக்கப்பட்ட பங்களா பிறந்தநாள், திருமணம், விடுமுறை போன்ற சகல கொண்டாட்டங்களுக்கும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0778105102, 0773013659 (2396)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## ஊடகங்களுக்கு மக்கள் ஆணையொன்று இல்லை

(கொழும்பு)

ஊடகங்களுக்கு மக்கள் ஆணையொன்று இல்லையென உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை குறிப்பிட்டார்.

சில ஊடகங்கள் பொய்யான தகவல்களை தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றன.

எதிர்வரும் தேர்தலில் இவ்வாறான பொய்யான தகவல்களுக்கு மக்கள் சரியான பதிலை வழங்குவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)


## வாடகைக்கு

உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரிக்கு அருகில் நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்கு.

தொடர்புகள்:- 0764734160 (2400)



## பசு விற்பனைக்கு

முதலாவது ஈற்று 10 நாளில் கன்று ஈன இருக்கும் பசு விற்பனைக்கு உண்டு. (Jersy இனம்)

தொடர்புகளுக்கு:- 0774206382 (2397)



## காணி விற்பனைக்கு

மட்டுவில் சந்திரபுரத்தில் செல்லப் பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாக 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. குடியிருக்க, தென்னை பயிரிட உகந்தது.

தொடர்புக்கு:- 0212059707 (2373)



## விற்பனைக்கு

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி சந்தைக்கு அருகாமை வீட்டுடன் காணி விற்பனைக்கு.

T.P:0769189756 (சி-1217)



## கிளிநொச்சியில் தொழில் வாய்ப்பு

மாபிள் விற்பனை நிலையத்திற்கு **களஞ்சியசாலை கணக்காளர்**-பெண் (வயது 25-30) மற்றும்

**உதவியாட்கள்** தேவை. ஆண்கள் (20-30 வயது)

கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்

**நியு சன் செரமிக்**

A9 வீதி, (பழைய வைத்தியசாலைக்கு முன்பாக), கிளிநொச்சி

0717923721, 0212283872 (1716)



## Spoken /Business English/ Ms Office/ ICT

3rd Batch பயிற்சி நெறிகள் Jan-Feb 2018
நேரம் மு.ப 08.30- பி.ப 12.45 (திங்கள்-வெள்ளி)
1.நுண்திறனும் தொழில்வழிகாட்டியும்
2.Spoken / Business English (both 2 months)
3.ICT equivalent to NVQ level 3
இரண்டு நெறிகளுக்கும் கட்டணம் ரூபா: 4000/-
3ம் நெறிக்கு கட்டணம் ரூபா:6000/-
நேரடித்தேர்வுக்கு 15, 16 Jan 9-10.30am சமுகமளிக்கவும். Classes start 15th Jan மேலதிகவிபரங்களுக்கு இயக்குனர், 077 650 5580

**Northern Technical Institute. (pvt)** 21637

YMCA Building, 107, 2/1 Kandy Rd, Jaffna. (2398)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடக்கு- கிழக்கு இணைப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்"

## இந்தியாவிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு.கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான அழுத்தங்களை இந்தியா வழங்க வேண்டும் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இந்தியத் தூதுவர் தரண்ஜித் சந்துவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே முதலமைச்சர் இவ்வாறு கோரியுள்ளார். வடக்கின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் வாழ்வாதார நகர்வுகளை கையாள்வது குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

தூதரகத்தில் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் வடக்கு. கிழக்கு இணைப்பின் அவசியம் குறித்து முதலமைச்சர் வலியுறுத்தியதை அடுத்து அந்த விடயம் தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் இணக்கப்பாடுகள் குறித்து ஆராய்வதாக உயர்ஸ்தானிகர் முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,



இந்திய அரசாங்கத்துடன் ஏற்கனவே வடமாகாண சபை சார்பில் நாம் நீண்ட காலப் பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். இதில் ஒரு கட்டமாகவே நான் இந்திய உயர்ஸ்தானிகரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். இரண்டு நாட்களுக்கு முன்னர் வடக்கின் காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான இரு நாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது குறித்து வினவினேன். காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திகள் குறித்து ஆரம்பத்தில் இருந்தே இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு நாம் கொண்டுவந்துள்ளோம். ஆகவே அவற்றை கையாள்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் தூத்துக்குடி, தலைமன்னார் இடையிலான கப்பல் சேவையினை முன்னெடுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. ஆகவே இந்த நகர்வுகள் குறித்து பரிசீலனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் வடமாகாணத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பது குறித்து ஆரம்பத்தில் இருந்து கலந்துரையாடப்பட்டு வந்த நிலையில் எவ்வாறான வீடுகள் அமைப்பது என்பது குறித்த சில சிக்கல் நிலைமைகள் காணப்பட்டன. பரிசீலனை செயற்பாடுகளும் கையாளப்பட்டன. இப்போது அவை குறித்து ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து பேசியிருந்தோம். வீடுகளை அமைப்பது குறித்த அவர்களின் தீர்மானத்தை விரைவில் தெரிவிப்பதாக குறிப்பிட்டனர். மேலும் வீட்டுத் திட்டம் அமைப்பது குறித்து மத்திய அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணம் நகர மண்டப புனரமைப்புகளுக்காக 800 மில்லியன் ரூபா நிதியை இந்தியாவிடம் இருந்து கோரியிருந்தோம். அது குறித்தும் ஆராயப்பட்டதுடன் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக புனரமைப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பிலும் அதனூடாக தமிழ் மக்களுக்கான பாதுகாப்புகள் குறித்தும் நாம் இதன்போது பேசியிருந்தோம். வடக்கு. கிழக்கு இணைப்பு விவகாரத்தில் ஆழமான பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் வடக்கின் நகர்வுகள் குறித்து மத்திய அரசாங்கத்தின் அனுமதிகள் மற்றும் ஒத்துழைப்பும் அவசியம்.

ஆகவே இவை குறித்து பேசுவதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். மீண்டும் நாம் நல்லெண்ண அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி மீது அரசியல் கோபம்

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு கொண்டு வந்த ஜனாதிபதி செய்யும் வேலைகளால் தனக்கு அரசியல் கோபம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

எனக்கு தற்போது அரசியல் ரீதியான கோபம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் பதவிக்கு கொண்டு வந்தவர் விதவிதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இந்த பேச்சு எனக்கு பிடிக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவை நாங்களே ஜனாதிபதி பதவிக்குக் கொண்டு வந்தோம். அடிகளை வாங்கிக்கொண்டு அனைத்து பிரதேசங்களுக்கும் சென்று நாங்களே தேர்தல் பணியாற்றினோம்.



இதனால், பிணை முறிப் பத்திர கதைகளைக் கூறி திருடர்களைப் பிடித்தோம் என்று கூறுகிறார். நாங்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்த ஜனாதிபதியும் நாங்கள் கொண்டு வந்த நல்லாட்சியுமே திருடர்களைப் பிடித்தது எனவும்ஹரின்பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-7)

# அலோசியஸ் நிறுவன சொத்துக்கள் முடக்கம்

## நால்வர் பணி இடை நிறுத்தம்



(கொழும்பு)

பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் (அர்ஜுன் அலோசியஸ்) நிறுவனத்தின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. அத்துடன், பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் நான்கு அதிகாரிகள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் மத்தியவங்கி தெரித்துள்ளது.

மேலும், பிணையங்கள் மற்றும்பரிவர்த்தனை ஆணைக் குழுவின் மேற்பார்வை வரம்பின் கீழ் வருகின்ற பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் சொத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனமானது, இலங்கை மத்திய வங்கியின் முன்னனுமதியின்றி சொத்துக்களை விற்பனை செய்தல், இலாபங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் ஆகியவற்றிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது.

இப்பணிப்புரைகள் 2018 ஜூலை 6 வரை நடைமுறையிலிருக்கும். இலங்கை மத்திய வங்கியானது, பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியுடன் வைத்துள்ள சொத்துக் களை முடக்கியுள்ளதுடன் பிணையங்கள் மற்றும் பரிவ ர்த்தனை ஆணைக்குழுவின் மேற்பார்வை வரம்பின் கீழ் வருகின்ற பேர்பெர்ச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் சொத்துகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளது. மத்திய வங்கியினால் நடத்த ப்பட்ட உள்ளக விசாரணை கள் மற்றும் புலனாய்வுக ளைத் தொடர்ந்து, அத்த கைய விசாரணைகள்மற்றும்புலனாய்வுகளில் கண்டறியப் பட்டவைகளை அடிப்படை யாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் கைநூலின் வகைப்படுத்தல், கட்டுப்படுத்தல்மற்றும் மேன் முறையீட்டு விதிகளுக்கிசைவாக சில அலுவலர்கள் தொடர்பில் ஒழு க்காற்று நட வடிக்கைகள் எடுக்கப்ப ட்டுள்ளன.

இதுதொடர்பில் நான்கு அலுவலர்கள்சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (இ-7)

# நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளிக்கு சபாநாயகரே காரணம் - வாசு.எம்.பி.

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப் பத்திர விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருந்தால், அண்மையில் அங்கு ஏற்பட்ட அமளியைத் தடுத்திருக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குருநாகல் நகரில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையின் 26 பிரதிகளை எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளு மன்றத்திற்கு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.



அறிக்கையின் 26 பிரதிகளை நாடாளுமன்றத்திற்கு வழங்குமாறு நாடாளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதி செயலகம், ஆணைக்குழுவின் அறிக்கையின் 50 பிரதிகளை இதுவரை அச்சிட்டுள்ளது. இதில் 26 பிரதிகளே நாடாளுமன்றத்திற்கு வழங்கப்படவுள்ளன.(இ-7)

# எதிர்வரும் 2020 பொதுத்தேர்தலில் கூட்டணி அரசு குறித்து சந்தேகம்

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

கூட்டணி அரசு வலுவிழந்து வருவதால் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தற்போதைய கூட்டணி அரசாங்கம் ஒன்றிணைந்து போட்டியிட முடியாமல் போகலாம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்து சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தேசிய பொருளாதாரம் கடும் அதிர்வுகளைச் சந்தித்து வரும் நிலையில் பிறந்திருக்கும் இந்த 2018 ஆம் ஆண்டு இலங்கை மீளச் செலுத்த வேண்டிய கடன் தொகை அதிகரித்துள்ளது. இதுபோன்ற பல சவால்களுக்கு தற்போதைய அரசு முகங் கொடுத்திருக்கிறது.

"அரச நிறுவனங்கள்சிலவற்றின் முன்னேற்றம் மந்த கதியிலேயே காணப்படுகிறது.

நாட்டின் நிதிப் பற்றாக் குறையைக் குறைப்பதற்கும் வெளிநாட்டு வருமானங்களை ஊக்குவிக்கவும் உள்முக நிதி வளர்ச்சியை அதிகரிக்கவும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவை.

"இத்தனை சவால்களுக்கு மத்தியில் வலுவிழந்து வரும் தற்போதைய கூட்டணி அரசாங்கம் 2020 பொதுத் தேர்தல்களில் இணைந்து பங்கேற்க முடியாத நிலை உருவாகக்கூடும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சவால் விடுத்தால் பெரும்பான்மையை நிரூபிக்கத் தயார்

## ஐ.தே.கட்சி பிரதியமைச்சர் அஜித்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு எவராவது சவால் விடுத்தால் அதனை நிரூபித்துக் காட்ட ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது என பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறை பண்டாரகம பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணக்க கூட் டணி அரசாங்கத்தை வேண் டாம் எனக் கூறினால் ஐக்கிய தேசிய முன்னணியின் தனியான அரசாங்கத்தை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018






# மதுபாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம்





திருகோணமலை - முத்துநகர் முஸ்லிம் பேண்தகு வித்தியாலயத்தில் மதுபாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த ஊர்வலம் மதுபோதை ஒழிப்புக் குழுவினரால் நேற்று நடத்தப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018


## வாடிக்கையாளர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

அங்கீகாரம் பெற்ற முகவர்



அங்கீகாரம் பெற்ற முகவர்




## சிவகுரு மோட்டார் பைக் சேல்ஸ் சென்டர்




## சிவகுரு ஹாட்வெயார்
021 228 5380, 077 741 8940

• ஹொண்டா அங்கீகாரம் பெற்றமுகவர்

கிளிநொச்சி ஏ-9 வீதி,
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
ஏ-9 வீதி, பரந்தன் 021 228 0155

கிளை :
ஏ9 வீதி, பரந்தன்

TAFE ட்ரக்டர்

அங்கீகாரம் பெற்ற முகவர்




ஏ-9 வீதி, பரந்தன்.
021 228 0155

விவசாயிகளின் உற்ற நண்பன் TAFE ட்ரக்டர்

## சிவகுரு
## கொக்கோ கோலா
Coca Cola Distributor
ஏ-9 வீதி, கிளிநொச்சி.
021 228 5380




அங்கீகாரம் பெற்ற முகவர்




BAJAJ





# அங்கீகாரம் பெற்ற முகவர்

பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள்
மற்றும் உதிரிப்பாகங்கள்

வாழ்க்கையின் சாமர்த்தியமான
சகாப்தத்திற்கு பிரவேசியுங்கள்
புதுப்பொலிவுடன் பஜாஜ்
மோட்டார் சைக்கிள்கள்.

ஏக விற்பனை முகவர்

கிளிநொச்சி மண்ணின் பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான

FORTEM MRF RE

## தரணீஸ் மோட்டர்ஸ் கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
021 228 0053, 077 459 2429, Hotline: 0777 418 940

கிளை :
ஏ9 வீதி, பரந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஊழல் செய்ததை உறுதி செய்தால் எனது பதவியை இராஜினாமா செய்வேன்!

## நீதியமைச்சர் தலதா அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருடியதாகவோ ஊழல் செய்ததாகவோ உறுதி செய்யப்பட்டால் என்னுடைய இரண்டு அமைச்சுப் பதவிகள், பாராளுமன்ற உறுப்பினர் பதவி அனைத்தையும் இராஜினாமா செய்து விட்டு வீட்டுக்கு செல்வேன் என நீதி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.



காவத்தை மாதம்பை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருட்டுப் புத்தி உள்ளவர்கள் தான் பதவிக்கு வர முயற்சிக்கிறார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை திருடனாக ஊடகங்களில் சித்திரிக்க சிலர் முயற்சிக்கிறார்கள்.

பிரதமர் ஊழல் செய்தமையை முடியுமானால் உறுதி செய்யட்டும். தலதா அத்துகோரள நீதிபதிகளின் விடயங்களில் தலையிடுவதாக சொல்வதாக கேள்விப்பட்டேன். பகுத்தறிவில்லாத ஜென்மங்களே அவ்வாறு சொல்கிறார்கள்.

ஆனால் நீதிபதிகளின் தீர்ப்புக்களில் தலையிட்டவர்கள் யாரென்பதை இந்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தங்களுக்கு பொருத்தமில்லாத தீர்ப்பினை வழங்கவில்லை என்பதற்காக நீதிபதிகளை வீட்டுக்கு அனுப்பி பழிதீர்த்தவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும்.

எனவே இனியும் இவ்வாறாக நாட்டை நாசப்படுத்திய வர்களை மக்கள் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இந்து இளைஞர்கழக பொங்கல் விழாவும் இலவச கணனி வகுப்பு ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

பொங்கல் தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் காலை 8 மணியளவில் பொங்கல் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து இலவச கணனி வகுப்பும் ஆரம்பமாக உள்ளதால் கணனிப் பயிற்சி வகுப்பில் இணைய விரும்பும் மாணவர்களை வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 11 சூரி செவ் 12இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/8164

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 32 செவ் 4இல்
உயரம்: 173cm
தகைமை/தொழில்:BSc/ QSஓமான்
தொ.இ: B/8165

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ரேவதி
செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/லண்டன்
தொ.இ: B/8166

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்A/L/வங்கியாளர் (அரச)
தொ.இ: B/8168

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 14
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Accounting/ அவுஸ்திரேலியா
தொ.இ: G/6474

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/6476

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6479

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 70 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6480

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## இராசி பலன்

14.01.2018
தை 01, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 4.10 மணிவரை
கேட்டை பிற்பகல் 3.17 மணிவரை
சுபநேரம் 9.34-11.04 மணிவரை
இராகுகாலம் 5.04-6.34 மணிவரை
பிரதோச விரதம், தைப்பொங்கல்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பிற்பகல் 3.10 மணிக்கு தனு-சந்த | | ராகு |
| சூரி, கேது | | | |
| சுக் சனி, புத | சந் | குரு,செவ் | |

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு, ஆன்றோர் சந்திப்பு உண்டு.

**மேடம்:** காலையில் கலகலப்பும் மாலையில் கலகலப்புமாக அமையும், புதிய விடயங்களை மாலை நேரம் தொடர்வதே நல்லது, தேக நலனில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்:** அல்லல்கள் தீர சிவனை வழிபடவேண்டிய நாள், சிரித்துப்பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**மிதுனம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்தினர்கள் வருகையுண்டு, போசன நன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர்.

**கும்பம்:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** தாமதமான காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பகை யொன்று நட்பாகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், 'குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியத்தில் வெற்றி பெற பராசக்தியை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** தேகநலனில் அக்கறை செலுத்த வேண்டிய நாள், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி:** வழிபாடுகளால் நம்பிக்கை கூடும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல் சிறப்புமலர் 2018





### அருளாசிச் செய்தி

இன்று தைத்திருநாள். இது ஒருதமிழர்களின்பெரு நாள். இன்று கொண்டாடப்படுகின்ற தைமாதப் பிறப்பு நந்நாளின் தைப்பொங்கல் பண்டிகை ஓர் இனிய பெருவிழாவாகும். இன்றைய தைப்பொங்கல் பண்டிகை யானது தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு விடியலைத் தரப் போகின்ற அற்புதக் கொண்டாட்ட நிகழ்வாகும்.

இது வயலிலே நெல்மணிகள் உருவாவதற்கு தன்னுடைய ஒளிக் கதிர்களை வீசி ஒளிக் கீற்றுக்கள் மூலம் உதவி செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இலங்கை மணித் திருநாட்டின் தமிழ் பேசும் தனித்துவம் வாய்ந்த தமிழ் மக்கள் அனைவரும் ஆனந்த மயமான மகிழ்ச்சி நிறைந்த நல் வாழ்க்கையில் திளைத் திருக்க வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனுடைய திருவருட்டிறத்தினால் இன்றைய பொங்கல் பண்டிகை நந்நாளில் அனைத்து மக்களுமே ஆனந்த வாழ்வில் மகிழ்ந்திருக்க நாம் ஆசி கூறி வாழ்த்துகிறோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஆதீன குரு முதல்வர். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

### தைப்பொங்கல் தின நல்லாசிகள்

பொங்கல் திருநாள் தமிழர் தம் பாரம்பரிய பண்டிகைகளில் முக்கியமானதாகும். வயல்களில் அறுவடை செய்யப்பெற்ற அரிசியைக் கொண்டு பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைத்து மகிழ்ச்சி காணும் விழாவாக பொங்கல் திருநாள் அமைகின்றது.

பொங்கல் நன்னாளில் ஆலயம் சென்று வழிபடுவதன் ஊடாக நாம் அனைவரும் தெய்வீக பொலிவு அடையலாம். மக்களின் அனைத்து உரிமைகளும் கிடைக்கப்பெற்று சாந்தி, சமாதான, சகவாழ்வு வாழ இப் புண்ணிய நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

பொங்கல் நல் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் குருமார்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோபவந்து**
**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள், (தலைவர்). சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**



### ஆனந்தம் பொங்கட்டும்

உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்த மூன்று பண்புகளும் உங்களிடம் நிறைந்திருந்தால் அதுவே ஆனந்தப் பொங்கல்.

தைத்திங்களில் தொடங்கியிருக்கும் இந்த உத்தராயண காலத்தை பயன்படுத்தி விலைமதிக்க முடியாத உண்மை அன்பு, நேர்மை என்னும் முத்துக்களைப் பெறுங் கள். இந்த உயர் முத்துக்கள் ஏற்கனவே உங்களிடம் இருக்கின்ற அறியாமை இருளால் அவை மறைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இருளைப் போக்க மிகச் சிறப்பான திசைக்கு கதிரவன் வந்துவிட்டான். இதைத்தான் உத்தராயண காலம் என்று சொல்கிறோம்.

அன்புதான் ஆனந்தம், அன்புதான் கடவுள், அன்புதான் எல்லாம். இந்தப் பொங்கல் திருநாளில் அன்பு பொங்கட்டும். ஆனந்தம் நிறையட்டும். அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல் ஆசிகள் உரித்தாகட்டும்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**
**சர்வேஜனகா சுகினோ பவந்து , சிவஸ்ரீ. சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P இந்து மத குருபீடாதிபதி. பிரதம குரு வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.**



### நன்றி உணர்வைத் தரும் பொங்கல் விழா ஆகட்டும்

2018 ஆவது ஆண்டு பொங்கல் விழா தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் கொண்டாடப்படும் வேளை இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பொங்கல் விழாவை நன்றியோடு கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக் கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பொதுநலனில் அக்கறை கொண்டோர் யார் - தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்விற்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும். முகங்களுக்கல்ல கொள்ளைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊரவர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாக திறமையுடையோரையும் இளையோர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். அரசியல்வாதிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் - கொள்கை சுயலாபங்கள் - கட்சி நலன்கள் - கருத்து வேறுபாடுகள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த சுபீட்சமான எதிர்காலத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் அனைவர் பேராலும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

**இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.**
**மேதகு கலாநிதி யஸரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. யாழ்.ஆயர்.**



### நல்ல சிந்தனைகள் பொங்கட்டும்

தைத்திங்கள் முதல் நாள் தமிழர் திருநாள். ஆண்டு தோறும் வந்து போகின்றது. வழக்கமும் பழக்கமுமாக பொங்கல் பானை வைத்துப் பொங்குகின்றோம். சடங்கு சம்பிரதாயமாகச் சில வைபவங்களைச் செய்து முடிப்பதில் திருப்தியடைகின்றோம்.

பொங்கல் நாளிலே பொங்கல் பானை சூடேறிப் பொங்குவது போல எங்கள் உள்ளங்களிலும் நல்ல சிந்தனைகள் பொங்கி எழ வேண்டும். இன்று எங்கு பார்த்தாலும் பணம், பதவி, புகழ் என்ற போலியான இலட்சியங்களே பொங்கி வழிந்து நாட்டைச் சிதைக்கின்றன.

பொங்கல் திருநாள் தமிழர்களின் பண்பாட்டுப் பெருநாள் என்பதை மனத்திருத்திப் பழைமையும்,பெருமையும் தனித்துவமான நல்ல பண்பாடுகளும் கொண்ட எம் தமிழ் இனத்தையும், தமிழ் நிலத்தையும் மனத்திருத்திப் பொங்கல் நன்னாளிலே இயற்கைச் சக்தியாக எம்மைக் காக்கும் சூரிய பகவானையும் நம் உடலை ஓம்பும் சக்தியாகிய உழு தொழிலையும் அதற்கு உறுதுணையான காளைகள் , பசுக்களையும் போற்றி நன்றியுடன் வழிபட்டு எல்லோரும் எல்லாவளமும் பெற்று இன்புற்றிருக்க இயற்கைச் சக்தியைப் பணிவோமாக.

**நீர்வை மணி.**






### பொங்கல் வாழ்த்துக்கள்

தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள். இறையருளால் அனைவரதும் வாழ்வும் சுபீட்சமாக அமைவுற பிரார்த்திக்கின்றேன்.

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் எமது இனத்தின் தலைசிறந்த கலாசாரத் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கமைவாக இவ்வாக்கு உண்மையாகட்டும். எமது வாழ்விற்கு விடிவு ஏற்பட மாட்டாதா? என ஏங்கும் எமது மக்களுக்கு தைப்பொங்கல் நல்வழி காட்டட்டும். எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வு உதயமாகட்டும். நீண்ட நெடிய எமது வரலாற்றில் எமக்காக, எமது கலை, கலாசார விடிவிற்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள் ஏராளம். அவர்களது ஆத்மா எமது மக்களின் விடுதலைக்காக இத்திருநாளில் ஆசீர்வதிக்கட்டும்.

துன்பங்கள் விலகி மகிழ்ச்சி பொங்க இறையருளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள். குருமுதல்வர். வீணாகான குருபீடம்.**



### செஞ்சொற்செல்வரின் தைப்பொங்கல் செய்தி

தைத்திங்கள் முதல்நாள் தைப்பொங்கல் திருநாள். உலகம் முழுவதும் வாழும் இந்து மக்கள் இயற்கைத் தெய்வமாகிய சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து நன்றி சொல்லும் நந்நாள். கண்கண்ட தெய்வமாகிய கதிரவன் காலமெல்லாம் நமக்கு உதவி வருபவன். வருடத்தில் ஒருநாள் விடிவுதரும் சூரியபகவானுக்கு பால்பொங்கல் செய்து எம் நன்றிப் பண்பாட்டை தெரிவிப்பது ஒரு உன்னத கடமையாகும்.ஆதிச் சமயமாகிய சைவம் இயற்கைக்கு மதிப்பளித்து இறைவழிபாட்டில் நன்றிக்கு முக்கியத்துவம் கொடுத்தது. உணவைப் படைத்து உண்ணும் பண்பாடு வேறு சமயத்தவரிடம் இல்லை.கடவுள் தந்தவற்றை கடவுளுக்கு காணிக்கையாக்கி பகிர்ந்து உண்ணும் பண்பாட்டை எம் முன்னோர்கள் வழக்கப்படுத்தினர்.

நோயாளர்கள், உறவை இழந்து தவிப்பவர்கள், ஏழ்மையில் அல்லல்படுகின்றவர்கள் அனைவரையும் இந்நாளில் அரவணைத்து ஆறுதல் செய்வோம். எங்கள் அகத்தில் இருக்கும் அழுக்குகளைப் போக்கி புனிதமாக வாழ்வதற்கு வெளிச்சம் தரும் கடவுளிடம் அனைவரும் வேண்டுதல் செய்வோம். சிறைக்கூடங்களிலும் வைத்தியசாலைகளிலும் காத்திருக்கும் அன்பு உள்ளங்களுக்காக பிரார்த்தனை செய்வோம். எங்கும் ஏழைகள் இல்லாத உலகைக் காண இறையருள் கைகூடவேண்டும் என இந்நாளில் பிரார்த்திப்போம். ஈழத்தமிழர்களுக்கு இறையருளினால் நல்லதொரு விடிவு கிடைக்க மன்றாடுவோம். தைப்பொங்கல் திருநாள் குறித்து அனைவருக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன். தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை. தலைவர், சிவபூமி அறக்கட்டளை. உப தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.**



### பொங்கல் வாழ்த்துக்கள்

பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் தமிழர் எத்தகைய இன்னல் வரினும் தமது சுயத்தை இழக்காது வாழ வேண்டும் என்றும் எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானை இப் பொங்கல் நாளில் ஒரு கணம் தியானித்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். உயரிய விழுமியங்களையும் கலை கலாசாரங் களையும் கொண்ட எமது மொழி அந்நியர் ஆட்சியில் இருந்து இன்று வரை சோதிக்குள்ளேயே ஆழ்ந்து கிடக்கின்றது.

இந்த இருளில் இருந்து வெளியே வருவதற்கு நாமனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒரே நோக்கோடு பயணிப்போமாக.

கட்டவிழ்ந்து விடப்பட்ட வன்முறைகளால் காணாமல் போன உறவினர்களின் வருகைக்காக ஏங்கி நிற்கும் உறவுகளுக்கு என்ன வார்த்தை சொல்லித்தான் ஆறுதல் கூற முடியும்.

இப் புனித நாளில் அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமானை பிரார்த்தித்து எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**சி.சத்திகிரீவன் கௌரவ செயலாளர், இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.**

# தைத்திருமகளே வருக! தமிழருக்கு விடிவைத் தருக!

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷ தைப்பொங்கல் விழா உலகமெங்கும் தமிழர் வாழும் பிரதேசங்களில் இன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. பழையன கழிந்து புதியன புகுதல் எனும் பாரம்பரிய முறைகளின்படி "தைமகளை" வரவேற்பதில் தமிழ் மக்கள் மிக மகிழ்ச்சி அடைகின்றார்கள். தமிழ் மக்கள் வாழ்வோடு இணைந்த பண்டிகைகளாக பல வற்றை ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடி வருகின்றோம். தமிழர் பாரம்பரியங்களை வலியுறுத்தும் வகையிலும், அர்த்தமுள்ளதாகவும் இப்பண்டிகைகள் அமைகின்றன. தமிழர் திருநாள் எனச் சிறப்பாக அழைக்கப்படும் பண்டிகை தைப்பொங்கல் ஆகும்.

சூரியவழிபாடு, உழவுத் தொழிலைப் போற்றுதல், செல்வம் தரும் மாடுகளுக்கு நன்றி செய்தல், கலாசாரம் பேணல் என பல காரணங்களோடு பின்னிப்பிணைந்தது இத் தைப்பொங்கல் திருநாள். மனதில் உவகை பொங்கினால் வாழ்வும் இனிதாய் அமையும் என்பதைக் காட்டுவதே தைப்பொங்கல்.

தைப்பொங்கல் நாளன்று வீட்டிலுள்ள அனைவரும் அதிகாலையிலேயே எழுந்து விடுவர். சூரிய பகவான் கிழக்குத் திசையில் காலிக்க முன்னரே வீட்டு முற்றத்தில் பொங்கல் செய்வதற்கான கருமங்களை ஆரம்பித்து விடுவர். பானையில் உள்ள பொங்கல் பொங்கி மேலெழும் காட்சியைக் கண்டு வீட்டிலுள்ளோர் அனைவரும் பரவசிப்பர். பொங்கலோ பொங்கல் என மகிழ்ச்சியோடு வாய்விட்டுக் கூவியபடி சூரியனையும், குல தெய்வத்தையும் பக்தியோடு வழிபட்டுப் பொங்கலை நிவேதிப்பர்

தலை வாழை இலைகளிலே சூரிய பகவானுக்குப் பொங்கல் படைக்கப்படும். அரிசிப் பொங்கலோடு கரும்பு, இளநீர் மற்றும் பலகார வகைகளும் படைக்கப்படும். இக் கருமங்கள் செய்யப்படும் வேளையில் சூரியனும் வட கீழ்த் திசையை நோக்கியவாறே தன் மெல்லிய கிரணங்களைப் பரப்பியவாறு காலிப்பான். இந் நேரத்தில் இனிய தேவார திருவாசகங்களைப் பாடி சூரிய பகவானை உள்ளன்போடு வணங்குவர். படையல், நிவேதனம் முடிவடைந்த பின்னர் குடும்பத்தாருடனும் உறவினர்களுடனும் பொங்கல் பிரசாதத்தை உண்டு மகிழ்வர்.

பொங்காத உறவினர் வீடுகளுக்கு பொங்கலைக் கொண்டு சென்று மகிழ்வோடு கொடுத்து மகிழ்ச்சியில் பங்கேற்பது தமிழர் பாரம் பரியங்களில் அன்றும் இன்றும் நடைபெறுகிறது. தைப்பொங்கல் நாள் முழுவதும் வீடுகளிலே புனிதமும் ஆசாரமும் ஆனந்தமும் இருக்கும். மாலையிலே எல்லோரும் வழிபாட்டுத் தலங் களுக்குச் சென்று சிறப்பான வழிபாடுகளில் ஈடுபடுவர். கோயில்களில் தைத்திருநாள் விசேட உற்சவங்கள் இடம்பெறு வது முண்டு.

தமிழர் தம் கிராமங்கள்தோறும் இத் திரு நாட்களில் தேசிய விளையாட்டுக்கள், பந்தயங் கள், கலை விழா நிகழ்ச்சிகள் நடத்துவது முண்டு.

புது வருடத்தின் முதல் நாளாகிய இத்தினத்தில் பழைய கோபதாபங்களை மறந்து உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பாடு இன்றும் தமிழ் மக்களி டையே காணப்படுகின்றது. கலப்பையும் இரட்டை மாடுகளும் அந்த நவீன தொழில்நுட்ப முறைகளை நாடித் தமிழர்களும் புதிய சவால் களுக்கு தக்கபடி வாழ்வு முறையை மாற்றினாலும் காலங்காலமாய் பேணி வந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மரபுக ளையும் ஒருபோதும் மாற்றத் தலைப்படார்.

எம் வாழ்வில் என்றும் மறக்க முடியாத தைப் பொங்கல் திருநாள் இனி எப்போது வரும் என்று எதிர்ப்பார்கள். எனவே இன்றைய தைப்பொங்கல் திருநாளில் பழையன கழிந்து புதியன புகுந்து எல்லோருடைய வாழ்விலும் சுபீட்சமும் முன் னேற் றமும் கிடைக்க எல்லாம் வல்ல சூரிய பகவானை வணங்கி அவனருள் கிடைக்க பிரார்த்திப்போமாக!

**கந்தையா-கனகசபை**
**சண்டிலிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் தைப்பொங்கல் வாழ்த்துச்செய்தி



உலகவாழ் தமிழ்மக்களால் இயற்கைக்கு தமது நன்றியைப் பறைசாற்றும் வகையில் அனுஷ்டிக்கப்படும் தைத்திருநாளை முன்னிட்டு இந்த வாழ்த்துச்செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மானிட சமூகத்தினை நாகரிகத்தை நோக்கிப் பயணிக்க வைப்பதில் உழவுத் தொழிலே முக்கிய காரணியாக அமைந்தது. நவீன கைத்தொழில் மயமாக்கத்தினதும் தொழில்நுட்ப வளர்ச்சியினதும் ஈர்ப்பினால் கிராமவாசிகள் விவசாயத்தைக் கைவிட்டு, நகரங்களை நோக்கி படையெடுக்கும் நிலையிலும் பண்டைய பாரம்பரியங்களுடன் கொண்டாடப்படும் இத்தகைய பண்டிகைகள் மனிதனின் கலாசாரம், பண்பாடு, மனித நேயம், ஒற்றுமை, பகிர்ந்துண்ணல் மற்றும் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற விழுமி யப் பண்புகளை சமூகத்தில் பேண உதவுவதுடன் அவற்றை எதிர்கால தலை முறையினரை நல் வழிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றன.அத்தோடு உழவுக்குப் பெருமை சேர்க்கும் தைத்திருநாளானது, உணவு உற்பத்தியைப் பெருக்கி, அதில் தன்னிறைவைப் பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின் முயற்சிக்கும் வலு சேர்ப்பதாகவே அமைகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் கொண்டாடப்படும் தைத்திருநாள் அனைவரது வாழ்க்கையிலும் வளம், நலம், செழிப்பு, மகிழ்ச்சி உள்ளிட்ட எல்லா நலன்களும் பொங்கச்செய்ய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், தைத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது மனங்க்னிந்த இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
ஜனாதிபதி.

# மாவை.எம்.பி.தைப்பொங்கல் வாழ்த்து



ஆண்டுதோறும் வையமெல்லாம் தைத்திருநாள் விழா பாரம்பரியமாக கொண்டாட்டங்களுடன் நிகழும் காலமாகும். மத மாச்சரியுங்களைக் கடந்த மக்கள் இப் பொங்கல் திருநாளை கொண்டாடுகின்றனர்.

தமிழ் மக்கள் வாழ்விலும், நெல் வேளாண்மை செய்தோறும் பயனுறுவோரும் வீடுகளிலும், திருக்கோவில்களிலும், வாழும் இடங்களிலும் காலையிலெழுந்து புத்தாடை கட்டி, புத்தரிசி எடுத்து புதுப்பானையில் பசும்பாலும், வெல்லமுமிட்டு விட்டுப் பொங்கலோ பொங்கலென்று பொங்கி சூரியனுக்கு நன்றியுடன் படைத்து வணங்கி விழாவினை தொடங்கிப் பொங்கல் பகிர்ந்து உண்ணும் பழக்கவழக்கம் தமிழர் வாழ்வியலாகி வருகின்றது. திருக்கோவில்களுக்கும் சென்று வழிபடுவர்.

சூரியன் வெயிலும், பகலாய் வெளிச்சமும், வேளாவேளையில் மழையும், நெல் விளைச்சலும் மனித குலம் உயிர் வாழப் பிரதிபலனில்லாது வாரி வழங்குவதால் நெஞ்சில் பொங்கும் நன்றியெனும் பண்பும், தமிழர் உலக நாகரிகத்தில் உயர்ந்து எடுக்கும் விழா பொங்கல் திருநாள் என்போம். மாதங்களில் மார்கழி மேல், ஙதயில் வேளாண் அறுவடை. அதனால் பொருட்செல்வம் எதிர்காலத்தை வென்றிட இதயத்தில் பொங்கிவரும் புது நம்பிக்கை, வாழ்வில் ஒளி , தை பிறந்தால் வழி பிறக்கும் என்று மக்கள் உயிர் வாழ்வியலை நிலைநாட்டி வரும் காலமே பொங்கல் காலமாகும்.

அடுத்த நாள் "மாட்டுப் பொங்கல்" , பால் தரும், செல்வம் தரும் மாடு வேளாண் நிலத்தை உழுது பண்படுத்தும். தமிழ் மக்கள் நன்றியுடன் பாராட்டும் மாட்டுச் செல்வத் திருநாளாய்க் கொண்டாடும் வளம் நிறை தமிழர் செல்வத்திருநாளாகும்.தமிழ் நாட்டில் கடலோரங்களில், ஆற்று நீர் நிலைகளில் எங்கிருந்தோ தமிழர் ஒன்று கூடி இதயப் பொங்கலை பகிர்ந்திடும் பண்பினை புதிய நாகரிகத்தை படைத்திடும் "காணும் பொங்கல்" என்று கொண்டாடுவர். அங்கு கூடும் போது காணும் இளம் உள்ளங்களில் காதல் மலரும். நல்வாழ்வில் திருமணத்திலும் இணையும் பாங்கு தமிழர் வாழ்வில் புது நம்பிக்கை தருகின்றமை காணும் பொங்கல் ஆகும். எங்கள் பாரம்பரியத்தை, பண்பாட்டை, உயர்ந்த நாகரிகத்தை என்றும் இழந்து விடோம் எனும் நம்பிக்கை வளரும். வாழும் நாள் பொங்கல் திருநாள். இப் பண்பாட்டினை என்றும் கடைப்பிடிப்பதே நாகரிகம். காணும் பொங்கல் விழாவினை இலங்கையிலும் ஏனைய தமிழர் வாழும் நாடுகளிலும் எதிர்காலத்திலும் கொண்டாடுவதும் தேவையேயாகும்.

மக்கள் வாழ்வியல், துன்ப துயரங்கள் இயல்பான பொழுதும் தைபிறந்தால் வழி பிறக்கும் என்று நம்பிக்கை வளருவதும், வாழ்வில் பொங்கல் வருவதும் பண்டைக்காலம் முதல் இன்று வரை கொண்டாடி வருவது தமிழர் வாழ்வியலின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.


இலங்கையிலும்50 ஆண்டுகளுக்கும்மேலாய் விடுதலைப்போரில்இழந்து போன உயிர்களும், அழிந்து போன எம் தேசமும் கொடுத்திருக்கின்ற விலையும் அர்ப்பணமும் தை பிறந்து விட்டது. விடுதலை வாழ்வு மலரும் எனக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புது நம்பிக்கை மீது திடசங்கற்பங் கொண்டு வாழ்ந்திட மலரும் தைப்பொங்கல் திருநாளிலும் பொங்கி மகிழ்வோம். தமிழர் பாரம்பரியத்தைப் பண்பாடுகளை இழந்து போவோமாயின் தமிழர் அடையாளங்களையும் தனித்துவ நாகரிகத்ஙதயும் வரலாற்றில் இழந்து விடுவோம்.

இஸ்ரேலிய மக்ள நாடின்றி வாழ்வின்றி போராடிய காலத்தில் அத்தேசத்தின் தந்தை பென்கூரியன் தலைமையில் ஆண்டு தோறும் புத்தாண்டில் ஒன்றுகூடி "அடுத்த ஆண்டு சுதந்திர தேசத்தில் வாழ்வோம்" எனப் பிரகடனஞ்செய்யும்நம்பிக்கை தான் இந்நாளில் இஸ்ரேல் நாட்டில் ஆளும் மக்களாய் புதிய உலகின் வழிகாட்டிகளாய் உயர்ந்த நாகரிகத்தைப் படைத்திருக்கின்றனர். அது போன்று நம் தமிழ் மக்களும் எழுவோம், வாழ்வோம் தமிழ் நிலத்தில் ஆள்வோம் என்ற நம்பிக்கையுடன் தைத்திங்களில் பொங்கி மகிழ்வோம்.

மாவை .சோ.சேனாதிராசா, பா.உ
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# இருள் அகன்று நிரந்தர ஒளி பிறக்கட்டும்

## டக்ளஸ் எம்.பி.வாழ்த்துச்செய்தி



எமது மக்கள் கதிரவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் ஓர் உன்னத தினமே தைப்பொங்கல்திருநாளாகும். இத்தைப் பொங்கல் திருநாளில் மக்களாகிய உங்களது மனங்கள் தோறும், நீடித்த நிம்மதியை தருகின்ற நிரந்தர மகிழ்ச்சியும் பொங்கி வர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த உறுதியான நம்பிக்கையோடு நாம் அனைவரும் பிறந்துள்ள தைப்பொங்கல் திருநாளை மகிழ்ச்சியோடு வரவேற்போம். நீங்கள் நினைத்தவைகள் யாவும் நிறை வேற வில்லை என்ற ஏமாற்றங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

நான் என்றும் உங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பவன். உங்கள் கனவுகள், ஏக்க ங்கள், தேவைகள் எவைகள் என்பது எனக்கு நன்றாக தெரியும். வீடற்ற மக்கள் வீதியில் நிற்கி றீர்கள். நிலமிழந்த மக்களும் காணாமல் போன உறவுகளை இழந்து நிம்மதியை தொலைத்த மக்களும் நீதி கேட்டு தெருக்களில் நிற்கிறீர்கள்.சிறைகளில் வாடும் உங்கள் உறவுகளை எண்ணி நீங்கள் ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். வேலையற்ற பட்டதாரிகள், இளைஞர்,யுவதிகள் யாவரும் நிரந்தர வேலைவாய்ப்பின்றி துயரப்படு கின்றீர்கள். எமது வரலாற்று வாழ்விடங்கள் யாவும் அபிவிருத்தியின்றி விட்ட குறையில் வீழ்ந்து கிடக்கின்றது.

எமது மக்களின் வாழ்வின் மீது பேரவலங்களை சுமத்திய போர்ச்சூழலும், கொடிய வன்முறைகளும் இங்கு ஒழிந்து போனாலும், போரின் வடுக்கள் இன்னமும்முழுமையாக தீர்ந்து போகவில்லை.இத்தகைய நீடித்த துயரங்களின் மத்தியில் உங்கள் மனங்கள் வாடியிருப்பது எமக்கு ஆழ்ந்த துயரத்தை தருகின்றது.தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அது போல் இம்முறை பிறந்து வரும் தைப்பொங்கல் திருநாளோடு உங்கள் வாழ்வில் புதியதொரு மாற்றத்தை நீங்களாகவே உருவாக்கவல்ல வாய்ப்பொன்றும்உங்களை தேடிவருகின்றது.வீணையைப் பற்றிப்பிடித்து நம்பிக்கையுடன் மீட்டுங்கள். அது உங்களது எதிர்காலத்தை நிச்சயம் ஒளி பெறச் செய்யும்.மாற்றங்களை உருவாக்க முடியாத தொன்று தொட்ட பழைய அரசியல் வழிபாடுகளை முழுமையாக கைவிட்டு எழுந்து வாருங் கள்.இந்த உறுதியும், நம்பிக்கையும், உங்களுக்கான உண்மையுள்ள வழிகாட்டலுமே எமது வரலாற்று வாழ்விடங்களில் மாற்றங்களை உருவாக்கும்.இருள் அகன்று எங்கும் நிரந்த ஒளி தோன்றட்டும்.

அனைத்து மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கி வழியட்டும்!அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா, பா.உ.
செயலாளர் நாயகம்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடியட்டும்



## அமைச்சர் அனந்தி வாழ்த்துச் செய்தி

ஆண்டாண்டு காலமாய் தொடர்ந்தேச்சியாக இருந்து வரும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வாசகத்தின் வழியே 2018 தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடிய வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தை உலகத் தமிழர் உள்ளமெங்கும் விதைத்து தமிழ்ப் புத்தாண்டை வருக வருக என வரவேற்பதோடு அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கிறேன்.விடைபெற்றுச் செல்லும் ஆண்டோடு தமிழர்களாகிய நாம் அனுபவித்து வரும் துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இழப்புகள், ஏமாற்றங்கள் என யாவும் எம்மை விட்டகன்று புலர்கின்ற புதிய ஆண்டில், சுதந்திரமான, சுபீட்சமான நல்வாழ்வு மலரட்டும் என்ற எதிர்பார்ப்புடனும் நற்சிந்தனையுடனும் அடியெடுத்து வைப்போம்.

"விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்து எடுக்கவில்லை. வரலாறு தான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு எதையும் வரலாறு எமக்கு விட்டு வைக்கவில்லை" என்ற தேசியத் தலைவரின் சிந்தனை வழியே எமது மண்ணினதும் மக்களினதும் விடிவிற்காய் உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சாத்வீகமான முறையில் தொடர்ந்தும் போராடத்தை முன்னெடுப்போம் என இன்றைய நாளில் உறுதியேற்போம்.

திருமதி அனந்தி சசிதரன்,
அமைச்சர், மகளிர் விவகாரம்,
வடமாகாணம்.

# மீன்பிடித் திணைக்கள அதிகாரி மீது தாக்குதல்

## நள்ளிரவு வேளை முகத்துவாரப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

மட்டக்களப்பு நாவலடி முகத்துவாரம் களப்புப் பகுயிதில் மீன்பிடி திணைக்கள அதிகாரி மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த களப்புப் பகுதியில் தடைசெய்யப்பட்ட சட்ட விரோதமானவலைகள்வீசிமீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக மீன்பிடி திணை க்களத்திற்குக் கிடைத்த தகவலையடுத்து நள்ளிரவு 12 மணியவில் மீன்பிடித் திணைக்கள அதிகாரி ஒருவர் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் களப்புப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களின் தோணிகளை, மீன்பிடி அதிகாரிகள் சோதனையிட்ட போது அவர்கள் மீது மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது மீன்பிடி திணைக்கள உதவி மேற்பார்வையாளர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட மீனவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


# சு.க.தமிழீழத்தை அங்கீகரித்து விட்டதா?

## நாமல் கேள்வி

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழீழத்தை அங்கீகரித்து விட்டதா என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் புலிகளின் புரட்சி பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டிருந்தமை தொடர்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜீவ் கொலை உத்தரவிட்டது யார்? உடையும் மர்மங்கள்



## விறு விறு தொடர் 01

இந்திய உளவுத்துறைகளின் கண்கள் அந்தப் 'பொருளின்' மீது விழுந்துவிட்டிருந்தது. ஆமாம், தமிழகத்துக்குள் இயங்கிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மூன்று வயர்லெஸ் கருவிகளில் இரண்டு செயலிழந்து போய்விட்டன. மிஞ்சியிருப்பது ஒன்றுதான். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவுத் தலைவரான பொட்டம்மானுடன் நான் நேரடியாகப் பேசிக்கொள்ள கொடுக்கப்பட்டிருந்த கருவி அது. அதன் வழியாகத்தான் இருவரும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தோம். பேசி முடித்தவுடன் தொடர்புகளை அறுத்துக்கொண்டு வேறு இடத்துக்குக் கொண்டுபோய் பதுக்கிவிடுவேன். அவ்வப்போது வெளிப்படும் 'சமிக்ஞை'யை வைத்து இந்த இரகசிய நடமாட்டத்தையும் கண்டுபிடித்துவிட்டிருந்தார்கள்...'

முதல் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள இந்த வரிகளைப் படிக்கும்போது, 'யார் இவர், என்ன சொல்லவருகிறார்' எனப் புத்தகத்துக்குள் தேடத் துடிக்கிறது மனம். தன் அனுபவங்களைச் சொல்லும் இரா.பொ.ரவிச்சந்திரன் வேறு யாருமல்ல... ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதி. நளினி, சாந்தன், பேரறிவாளன், முருகனைப்போல் ரவிச்சந்திரனும் 27 ஆண்டுகளாக சிறைக்குள்தான் இருக்கிறார். ஆனால், மற்றவர்களைப் போல ரவிச்சந்திரனை பரவலாகத் தெரியாது.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள நளினி, பேரறிவாளன் உள்ளிட்ட மற்றவர்களின் அனுபவங்கள் வேறு; ரவிச்சந்திரனின் அனுபவம் வேறு. நளினியோ, பேரறிவாளனோ இலங்கைக்குச் சென்றதில்லை. புலிகள் இயக்கத்தில் நேரடியாகப் பயிற்சி பெற்றவர்களும் இல்லை; பணியாற்றியவர்களும் இல்லை. ஆனால், ரவிச்சந்திரனுக்கு அந்த அனுபவம் உண்டு! அதுவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பாரதி மாஸ்டர், செல்வராஜ் மாஸ்டர் போன்றோரிடம் பயிற்சி பெற்றவர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகளான மில்லர், சூசை, டேவிட் உள்ளிட்டவர்களோடு சேர்ந்து சமர் புரிந்த அனுபவங்கள் உடையவர். இந்த விபரங்கள் தெரியவரும் போதுதான், ரவிச்சந்திரனின் பாத்திர முக்கியத்துவத்தை நம்மால் உணர முடிகிறது.

ஈழத்தில் அவர் நேரில் கண்ட காட்சிகளையும், தன் பயிற்சி அனுபவங்களையும், போர்க்களங்களையும் விபரிக்கும்போது, படிப்பவர்கள் மனதில் ஈரம் கசியும். ரவிச்சந்திரனின் அப்பா பெயர் பொய்யாழி. விவசாயத் துறை அதிகாரியாக இருந்தவர். இப்போது இறந்துவிட்டார். இளவயதில் ஈழம் பற்றிப் படித்த, கேட்ட செய்திகளால் உந்தப்பட்டு, 'ஈழ விடுதலைப்போரில் பங்கெடுக்க வேண்டும் அதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர வேண்டும்' என்ற எண்ணத்தோடு இருந்திருக்கிறார் ரவி. பதினொன்றாம் வகுப்பு படிக்கும்போது, காலாண்டுத் தேர்வு கட்டத்திலேயே படிப்பைத் துறந்து, வீட்டிலிருந்து வெளியேறி ராமேஸ்வரம் சென்றவர். அங்கு அலைந்து திரிந்து அகதிகளின் படகில் யாழ்ப்பாணம் சென்று, பல சிரமங்களுக்கு மத்தியில், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிடிவாதமாகச் சேர்ந்தார். பிறகு, புலிகள் இயக்கத்தின் நலனுக்காகவே, அங்கிருந்து வெளியேறி மீண்டும் தமிழகம் வந்து தனி இயக்கம் ஆரம்பித்தவர்.

புலிகளுக்கு அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைக்கும் உதவிகளைச் செய்து வந்தார். அந்த




"புலிகள் தங்கள் ஆவணத்துக்காக எடுத்தார்கள் என்பது உண்மையானால், புலிகள் அமைப்பின் ரகசியம் காக்கும் தன்மைக்கே இது முரண்பாடாக இருக்கிறதே. சாதாரண போராளிகளே தடயங்களை விடமாட்டார்கள் எனும்போது, மூத்த போராளி சிவராசன் எப்படி தடயத்தை விட்டுச் சென்றார்?"

நிலையில், தமிழக கியூ பிரிவு பொலிஸார் இவரைக் கைது செய்தார்கள். பிறகு ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கி இன்று ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கிறார். நல்ல ஆங்கில, சட்டப் புலமை பெற்றவராக இருக்கிறார். ஊடக வெளிச்சம்படாத மனிதராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கில் சிக்கியது, சிவராசனின் செயற்பாடு என்ன, அவரின் உண்மையான திட்டம் என்ன என்பது உள்ளிட்ட பல அதிர்ச்சி, திருப்புமுனைத் தகவல்களை இந்தப் புத்தத்தில் தெரியப்படுத்தியுள்ளார். கடந்த காலங்களில் ரவிச்சந்திரன் அவ்வப்போது எழுதி வைத்திருந்ததை எல்லாம் அவரின் வழக்கறிஞர் T. திருமுருகன் உதவியோடு பெற்று, முறைப்படுத்தி, விறுவிறுப்பாகத் தொகுத்துள்ளார் பா.ஏகலைவன். 'யாழ்' பதிப்பகத்தின் வெளியீடாக வரும் 'சிவராசன் டாப் சீக்ரெட்' புத்தகத்திலிருந்து சில பகுதிகள் இங்கே...

'ஒரு தேசத்தின் அடுத்த பிரதமர் யார்' என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் புகைப்படம் எடுக்க வருவார்கள் என்பது யாரும் அறிந்த ஒன்றுதான். அந்தச் சாதாரண விடயம்கூட விடுதலைப்புலிகள் போன்ற ஓர் அமைப்புக்கும் அதன் தலைமைக்கும் தெரியாதா? மிக இரகசியமான ஒரு கொலைத் திட்டத்தைப் புகைப்படம் எடுக்கத் திட்டமிட்டிருந்தால், அதற்கென தனியாக ஒரு புகைப்படக்காரரைப் பயன்படுத்தி இருப்பார்களே? விடுதலைப்புலிகளிலேயே திறமையான புகைப்படக்காரர்கள் இருக்கிறார்களே? அப்படியே அந்தப் புகைப்படம் எடுப்பவர் இறந்திருந்தாலும், கமராவை அங்கிருந்து அகற்றும் ஏற்பாட்டையும் செய்திருக்கமாட்டார்களா?

ஹரிபாபு ஒரு தொழில்முறை புகைப்படக்காரர். ஓர் இடத்துக்குப் போனால் மற்றவர்கள் படங்களையும் எடுக்கக் கூடியவர். 7 மணியிலிருந்து 10.20 மணிக்கு குண்டுவெடிப்பு நடக்கும் வரை வெறும் பத்தே ஸ்டில்கள்தான் எடுத்திருப்பார் என்பது நம்பும்படியாக இருக்கிறதா? இந்தச் சந்தேகங்களுக்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன. ஏனென்றால் அந்த புகைப்படச்சுருள் வெட்டப்பட்டு இருந்தது. கமராவும் ஃபிலிம் ரோலும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டு சி.பி.ஐ-யிடம் ஒப்படைக்கப்படும் வரையிலான அந்த மூன்று நாள் நிகழ்வுகள் எல்லாமும் மர்மமாக இருந்தன.

ஹரிபாபு எடுத்த மொத்த படங்களில் சி.பி.ஐ வெளியிட்ட படங்கள் தவிர மற்ற படங்களில் எத்தனை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் அல்லது பிரமுகர்கள் இருந்திருப்பார்கள்? மற்ற படங்களைக் காட்டி அவர்களை வழிக்குக் கொண்டு வரவாவது சிவராசன் எடுக்கச் சொல்லியிருக்கலாம் அல்லவா? 'இல்லை, பத்து படங்கள்தான் எடுக்கப்பட்டன' என்றால், 'ராஜீவைக் கொன்றது புலிகள்தான் என்று உலகம் தெரிந்துகொள்ள வேண்டும். கொலைப்பழி சுமக்க வேண்டும்' என்று சிவராசன் திட்டமிட்டுச் செய்தார் என்று புரிகிறது அல்லவா?

புலிகள் தங்கள் ஆவணத்துக்காக எடுத்தார்கள் என்பது உண்மையானால், புலிகள் அமைப்பின் இரகசியம் காக்கும் தன்மைக்கே இது முரண்பாடாக இருக்கிறதே. சாதாரண போராளிகளே தடயங்களை விடமாட்டார்கள் எனும்போது, மூத்த போராளி சிவராசன் எப்படி தடயத்தை விட்டுச் சென்றார்? ஹரிபாபு இறந்தாலும் அவரது கமராவை எடுக்காமல் சிவராசன் வந்திருக்கமாட்டார். 'ஏன் அப்படி விட்டுவிட்டு வந்தார்' என்பதையும், 'அதன்பிறகு உடனடியாக ஈழத்துக்குத் தப்பிச் செல்ல அவர் ஏன் அக்கறை காட்டவில்லை' என்பதையும் முடிச்சுப் போட்டுப் பார்க்க வேண்டும்.

-மர்மங்கள் அடுத்த வாரம் தொடரும்...-

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018




சிறி சிவாஞ்சனா
ஜூவல்லறி

உங்கள் மனம் கவரும் காவிய
நய மிகு கலைத்துவமான ஆபரண
வகைகளின் களஞ்சியம்



தங்கமயமான வாழ்வுக்கு
தனித்துவமிக்க ஓர் இடம்

Sri Sivanchchana
Jewellery

149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 149A, Kasthuriar Road, Jaffna. T.P.021 222 9227

வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள்

பேப்பர் ஹவுஸ்

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள்.



பிறந்தநாள், திருமணநாள் அலங்காரப் பொருட்கள்
கணனி தொடர்பு சாதனங்கள் (ரிபன், இங்)
பொலித்தீன் வகைகள், ரெஜிபோம், சொப்பின் பேக் வகைகள்

விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

பேப்பர் ஹவுஸ்
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

PAPER HOUSE
300, HOSPITAL ROAD, JAFFNA.
தொடர்புகளுக்கு : 021 222 5343



Sky Rose
ஸ்கை ரோஸ்

சிதம்பரம் கவரிங்

அனைத்து வகையான வொறன்டி
கவரிங் நகைகளும் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளலாம். கவரிங்
நகைகளுக்கு பவுண் தண்ணீர்
போட்டுத் தரப்படும்.



No. 01, Hospital Road,
Bus Stand, Jaffna.

T.P : 021 561 8916

இல.01, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

வாகன விபத்தைத் தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்.

சசிகா
லேணர்ஸ்

DS No - 882

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். Hotline - 077 722 6247
021 221 7678, 077 614 0361

THE SASIKA LEARNERS



கிளை நிறுவனங்கள் :
மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம்.
021 224 3393 / 070 301 3014
வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472 / 070 301 3012
சங்கானை : ஓட்டுக்கரை வீதி, சங்கானை.
021 225 1664 / 070 301 3016

SasikaLearners
sasikadrivingschool@gmail.com

821 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 8004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொதேண் சென்றல் ஆய்வுகூடம்
## Northern Central Laboratory

நொதேண் சென்றல் ஆய்வுகூடத்தின் புதிய கிளை மக்கள் நலன் கருதி இப்போது **வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில்** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**சேவை நேரம்:** காலை 6 மணிமுதல் இரவு 8 மணி வரை

பரிசோதனை பெறுபேறுகளை உங்கள் தேவைக்கேற்ப 2 மணி நேரத்திற்குள்ளேயே பெற்றுக் கொள்ளலாம்.



- உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பம்
- சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆய்வுகூட வல்லுநர்கள்
- விசேட வைத்தியர்களின் மேற்பார்வை

மேலதிக தகவல்களுக்கு :

**நொதேண் சென்றல் ஆய்வுகூடம்**
**Northern Central Laboratory**
No.518 Hospital Road, Jaffna.
T.P : 0217 217 328 , 021 222 3720,
email : nchlaboratory@gmail.com
web : www.nchjaffna.com

10% விலைக்கழிவு

**யாழ்.நகரில் 24 மணி நேர சேவைகளை கொண்ட ஒரே ஒரு ஆய்வுகூடம்**

உலகத்தரம் வாய்ந்த சத்திர சிகிச்சைக்கூடம்



தகுந்த வைத்திய ஆலோசனைகளின் பின்னர் காலதாமதமின்றி உங்களுக்கு ஏற்ற நேரத்தில் அனைத்து சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

**லப்பராஸ்கோபி (Laparoscopy) என்றால் என்ன?**

வயிற்று உட்பகுதியுறுப்புக்களை வயிற்றில் சிறிய துளைகளிட்டு மெல்லிய குழாயினை உட்செலுத்தி பரிசோதிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.


**வழமையான சத்திரசிகிச்சையிலிருந்து லாப்ரோஸ்கோபி எவ்வாறு வேறுபடுகின்றது?**

- பெரிய வெட்டுக்காயங்கள் வராது
- சத்திர சிகிச்சையின் பின்னர் விரைவில் இயல்பு நிலைக்குச் செல்லமுடியும்
- கிருமித்தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் மிகக்குறைவு
- நீண்ட நாட்களாக வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை

**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
E-mail: nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

# Advanced Technology Systems

ATS




**Computer Sales And Repairs, Maintenance, Networking and CCTV Camera, Installation.**

# Advanced Technology Systems




108D, Post Box Junction,
Palay Road, Thiruelvely,
Jaffna.

076 781 7831
021 221 9330
atsjaffna@gmail.com

EPSON ASUS DELL hp acer intel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

## சாரதி பயிற்சிப் பாடசாலை

- ஆண், பெண் இருபாலாருக்கும் (AUTO GEAR AND MANUAL) வாகனப் பயிற்சி.
- பெண்களுக்கு நவீன காரில் பெண் பயிற்சியாளர்களால் பயிற்சி.
- விசேட வீடியோ வகுப்புக்கள்.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டண வசதி.
- விரும்பிய நேரத்தை தெரிவு செய்யும் வசதி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் மும்மொழிகளிலும் பயிற்சி.










226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 - 4353
021 - 492 - 3200
077 - 722 - 5292

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 - 228 - 5505
071 - 454 - 6955

இல.216, A9 வீதி
வவுனியா (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 - 222 7777
0777 - 100 - 444

இல.227/6,
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
(மதவடி அண்மையில்)
021 - 224 - 2022
071 - 454 - 6956

கண்டி வீதி,
சாவகச்சேரி
021 - 227 - 0700
021 - 492 - 3202

விக்னேஸ்வரா
கல்லூரி வீதி, நெல்லியடி.
021 - 300 - 6550
071 - 454 - 6957

இல.94, பிரதான வீதி,
மன்னார்.
071 - 988 - 7699, 077 - 847 - 2732

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி,
முழங்காவில்.
021 - 300 - 6544, 071 - 454 - 6955



பொங்கல் நல்வாழ்த்துகள்

வாடியடி சந்தி, பூநகரி.
021 - 320 - 1818, 071 - 454 - 6955

புளியடிச்சந்தி, முல்லைவீதி, விசுவமடு.
021 - 320 - 1515, 071 - 454 - 6955


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBC பாலர் பாடசாலையின்
20ம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2018ம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய பயிற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

CELEBRATING 1998 20 2018 YEAR IN EDUCATION


NO ADMISSION FEES
NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
| --- | --- | --- | --- |
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 4+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அனைவருக்கும் இனிய
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்


Rube Jewellery Since 1982

நம்பிக்கை, கைராசி
மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 35 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



ரூபி ஜுவல்லறி




சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

HAPPY PONGAL

எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

எமக்கு யாழ் நகரிலோ, இலங்கையின் எப்பாகத்திலோ வேறு எந்தக் கிளைகளும் கிடையாது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074

புதிய பிரிவு
14-01-2018
ஆரம்பம்
சுன்னாகம் கட்டணத்தில்

அனைவருக்கும் இனிய
பொங்கல்
வாழ்த்துக்கள்!!!

UGC University Grants Commission APPROVED CERTIFICATES

பட்டதாரியாகும் உங்கள் கனவை
நிறைவேற்ற
விண்ணப்பித்துவிட்டீர்களா?

| | | |
| --- | --- | --- |
| B.Sc. in Computer Science | B.Sc. in Comp. Sci. (Top Up) | M.Sc. in Computer Science |
| B. Ed. | M. Ed. | D. Ed. |
| B. Sc. in Physical Education & Sports | B. Sc. in Civil Eng. | B. F. A. (Music / Dance) |
| B. F. A. - Top Up (Music / Dance) | M. F. A. (Music / Dance) | M.Phil (Music / Dance) |
| Ph.D (Music / Dance) | | Ph.D |

தொடர்புகளுக்கு.....
NORTH LANKA IIT
Top Floor, Peoples Bank Building, Stanley Road, Jaffna
Phone: 0767504535 | 0214927088

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018


## LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI
(AMI METHOD) ENGLISH MEDIUM



**HURRY TO REGISTER**
**AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS**

- எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM). கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப் படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உரு வாக்குதல் ஆகும்.
- 2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாட சாலைக்கு உள்வாங்கப்படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண் ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**OUR VISION**

- To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

**OBJECTIVES**

- To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.
- To provide enriching strategies that would encourage students to be goal- oriented and to be self- managers.
- To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion,satiating the need of the intellect, the body and the soul.

**CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS**

154 , BROWN ROAD, JAFFNA.
TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172

## க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

**76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

ஆயுர்வேத மருந்து சரக்கு, கோவில் அபிஷேக பொருட்கள், எண்ணெய் வகைகள், வாசனைத் திரவியங்கள், கும்பாபிஷேக பொருட்கள், சங்காபிஷேகப் பொருட்கள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



**தொ.பே : 021 222 2912**

வாடிக்கையாளர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

## எரிக்கனேஷ்

**மூக்குக் கண்ணாடியகம்**

நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள தேர்ந்த ஒரே ஸ்தாபனம்



நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளதேர்ந்த ஒரே ஸ்தாபனம்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2486

கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல. 80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

பொங்கல் நல் வாழ்த்துக்கள்

## மதுரா



**அழகுக் கலைக் கல்லூரி, அழகு நிலையம்**
பருத்தித்துறை றோட், இருபாலைச்சந்தி, கோப்பாய்.



அழகுக்கலை டிப்ளோமா, புரொபஷனல், அடிசனல், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.

காலம் 1ஆம், 3ஆம் மாதம் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.(பதிவு செய்யப்பட்டது)



கழிவுக் கட்டணமாக 25% ம் வழங்கப்படும்

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
கட்டண விபரம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்
மணப்பெண் அலங்காரம் பக்கேஜ்
20000/=

தையல், சாறிவேர்க், கரண்ட்வேர்க், ஐசிங் ஆகிய பயிற்சிகளும் உண்டு. ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.


மகளிர் மட்டும்

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி. 077 936 2642

## THISHA
Guest House

**AC, NON AC ROOMS, AVAILABLE**

Let us treat You to a romantic holiday...
Offering style, comfort & friendly hospitality!
**K.K.S.Road, Chunnakam**



**திசா** கெஸ்ட் ஹவுஸ்

குளிரூட்டப்பட்ட அறைகள், சாதாரண அறைகள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு மண்டப வசதியும் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 929 7909 / 077 398 1094

கே.கே.எஸ். றோட், சுன்னாகம்

வாடிக்கையாளர்களுக்கு தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.



## ஏகாம்பரம்
**புடைவை மாளிகை**

**A.EHAMPARAM**
Whole Sale & Retail Dealers in Textiles

T.P : 021 222 2151
021 222 5938

74(7), Grand Bazaar, Jaffna.
74 (7), பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018


அன்பான வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்

Vista8 Printers

Vista8 Printers

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் நிறுவனங்கள், அமைப்புக்கள், சொந்த தேவைகளுக்கான அனைத்து விதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள அணுகிடுவீர்...

Designing
Offset Printing
Books, Magazines
Certificates
Digital Printing
Banner Printing
Digital Name Board
Wedding Invitation Cards
Mug Printing
Jersey
Shield, Trophy
Medals & etc ...

No. D116, Ramanathan Road,
Kaladdy Junction, Jaffna.
0777 918 373 | 0755 206 848
021 221 5488
vista8print@gmail.com

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

Nivithra

Beauty Parlour & Training Academy

இலவச அழகுக் கலைப் பயிற்சி

நிபந்தனைகளுக்குட்பட்டது

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் புதிய இலவச அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சியில் இணைய விரும்புவோர் கீழ் உள்ள இலக்கத்திற்கு SMS அனுப்பி எமது அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

திகதி : 18.01.2018 வியாழன்
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : Nivithra Beauty Parlour & Training Academy 207, Navalar Road, Jaffna.

தொடர்பு :
077 771 2604

வருட ஆரம்பத்தை
முன்னிட்டு முதல்
இணையும் 10 மாணவர்களுக்கு
Cake Icing Course
முற்று முழுதாக இலவசம்

மலாயன் கபே

A FIRST CLASS VEGETARIAN HOTEL

MALAYAN CAFE

எமது வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள்


மலாயன் கபே
சைவ உணவகம்

36,38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

36,38, Grand Bazaar,
Jaffna, Sri Lanka.
T.P : 021 222 2373


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018

## KINGS ELECTRONICS(PVT) LTD

20.01.2018 வரை தைப்பொங்கலை முன்னிட்டு

**மேலும் விலைக்கழிவுடன்...!!! எம்மிடம்**

★SPECIAL★ ★OFFERS★

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

240 litres LG REFRIGERATOR
SHOWROOM PRICE ~~RS.69,900/=~~
KINGS OFFER PRICE RS.54900/=
10 YEAR WARRANTY

150 litres HISENSE REFRIGERATORS
SHOWROOM PRICE ~~RS.34,990/=~~
KINGS OFFER PRICE RS.29900/=

FULLY AUTOMATIC HAIER WASHING MACHINE 36500/=

### SMART LED TELEVISIONS

| | |
|---|---|
| HISENSE 39" | 63,900/= |
| SONY 48" | 106,000/= |
| HISENSE 55" 4K | 132,500/= |
| HISENSE 32" | 33,750/= |
| HAIER 32" | 28,750/= |
| SAMSUNG 40" | 74,000/= |
| SAMSUNG 43" 4k | 109,000/= |
| SAMSUNG 55" 4K | 185,000/= |

LG HOME THEATRE SYSTEM
SHOWROOM PRICE ~~RS.50,999/=~~
KINGS OFFER PRICE RS.37,500/=

LG-5.1 DVD HOME THEATER
SHOWROOM PRICE ~~RS.23,990/=~~
KINGS OFFER PRICE RS.16900/=

### 32" LED TELEVISIONS 3YEARS WARRANTY

| BRANDS | SHOWROOM PRICE | KINGS OFFER PRICE |
|---|---|---|
| Samsung | ~~57,990/=~~ | 31,000/= |
| Hisence | ~~37,990/=~~ | 23,750/= |
| Panasonic | ~~49,499/=~~ | 27,900/= |
| Hitachi | ~~44,990/=~~ | 25,900/= |
| Abans | ~~27,999/=~~ | 21,500/= |
| Maxmo | ~~29,999/=~~ | 20,500/= |
| LG | ~~52,999/=~~ | 29,600/= |
| Samsung Full HD | ~~57,990/=~~ | 37,500/= |

3 YEAR WARRANTY
Samsung 24" - 19,900/=
JVC 24" - 16,500/=
Hisense 24" - 17,600/=

OPEN 9.00AM TO 8.00PM 365 DAYS

258 litres LG REFRIGERATORS INVERTER
10 YEAR WARRANTY
SHOWROOM PRICE ~~RS.72,900/=~~
KINGS OFFER PRICE RS.64900/=
Double Door

LG DVD PLAYER
KINGS OFFER PRICE RS.5500/=
1 YEAR Warranty

1 YEAR Warranty SONY DVD PLAYER
SHOWROOM PRICE ~~RS.7,490/=~~
KINGS OFFER PRICE RS.5400/=

Sony 5.1 Home Theater RS 21,000/=
LIMITED ONE YEAR 1 WARRANTY

Stand Fan Rs. 2,900

SOFA SET 3+1+1 34,900/= ONLY

5 YEARS WARRANTY

076-3594665 021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)


## AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

- சகல அரச நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய மிக மிக தரமான உணவுகளை குறைந்த விலையில் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம் ஆச்சி ஹொட் பூட்.
- கல்வி பயிலும் மாணவ சமூகத்திற்காக விசேட விலைக் கழிவுகளில் பாடசாலைகளுக்கு உணவு விநியோகம்.
- இன்று வடமாகாணத்தில் அதிகளவான உணவுகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது.
- நேரடி மேற்பார்வையின் கீழ் உணவு உற்பத்தி. பொதியிடல். விநியோக செயற்பாடுகள்.
- கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.
- திருப்திகரமான உணவுடன் கூடிய சேவையே எமது பிரதான நோக்கம் ஆகும்.
- கைதடி மற்றும் வடக்கு விவசாயிகளின் வாழ்வுக்கு வலுவூட்டுவோம்.
- தினசரி கூடுதலான விவசாய உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து சுய வருவாயை ஈட்டிக் கொள்ளவும்.
- சிறந்தவொரு வாழ்க்கையை முன்னெடுக்கவும் உதவி வருகிறது.
- கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதி உயர்தரம் உறுதி செய்யப்படுகிறது.




**Aache Food Factory, Kaithady.**
**021 205 7455, 021 205 7456**

**Aache Hot Food Resturant**
**147, Palaly Rood, Thirunelvely,**
**021 222 5001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018


## TVS சங்கானையில் வழங்கும் மாபெரும் விலைக்கழிவு

அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

Wego மோட்டார் சைக்கிளுக்கு 7500 ரூபா விசேட கழிவு



இம்மாதம் 15,16 ஆம் திகதிகளில் மட்டும் இவ் விலைக்கழிவு

**JP Motors Chankanai**

021 225 2225, 077 758 5909, 077 508 7251, 077 604 1412

## MAJOR II

**GLUCOMETER WITH LIFETIME WARRANTY**

*Low in Price - High in efficacy*

ரூபா 2500 க்கு வாழ்நாள் உத்தரவாதத்துடனான குளுக்கோ மீற்றர். குறைந்த விலை நிறைந்த வினைத்திறன் இது மட்டுமல்ல ஒவ்வொரு மீற்றருடனும் ரூபா. 1010.00 பெறுமதியான **25 Strips** மற்றும் **25 Lancets** இனாம்.

பொங்கல் தினத்தை முன்னிட்டு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் விசேட சலுகை.




**For 5 Meter – 2 Meter Free.**

**VANIKAA SURGICALS**

203, Hospital Road, Jaffna.
Phone: 021 222 0077 Fax 021 222 2445
Office Mob : 077 44 22 367

S.Sugumaran
Proprietor
Nivessmns@gmail.com

## மிலேனியம்

உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்

## Millennium

Guest House & Restaurants

Bedroom - 4500 /= AC / 4000/= Non A/C
4 Bed - 4000 /= AC / 3500/= Non A/C
3 Bed - 3500 /= AC / 3000/= Non A/C
2 Bed - 2500 /= AC / 2000/= Non A/C

24 Rooms உம் ஒன்றாக எடுத்தால்
3000/= படி 24 Rooms உம்







22 AC Rooms & Hall

எமது விருந்தினர் விடுதிக்கு சமையல்காரர் மற்றும் தோட்ட வேலை செய்யக்கூடிய ஆட்கள் உடன் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

No. 76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.
Tel :- 021 222 5876, 077 601 6310,
021 221 5195, 021 221 5196


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018


யாழ்.மாவட்ட மக்களின் மனங்களில் முதற்தர
சுத்தமான குடிதண்ணீர் என்ற தனி நாமத்தைப் பெற்ற...

**American Water**

**American Just drink it!**

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்



# P.N.K. Group




இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

**589, K.K.S.Road, Jaffna.**

**T.P :- 021 221 7277, 021 222 3096**

தூய்மையானதும் நீண்ட காலம்
பாவிக்கக்கூடியதுமான இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு

# லிற்றோ

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்




LITRO GAS

**No : 154, Hospital Road, Jaffna.**
**T.P : 021 222 8899, 021 492 5831**

லிற்றோ காஸ்
ஏக விநியோகஸ்தர்



LITRO GAS

# S.V.முருகேசு

**No : 106,**
**Hospital Road,**
**Jaffna.**

**T.P : 021 492 5830**
**021 222 4341**
**Fax : 021 222 4341**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்புமலர் 2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி கட்டட பொருட்கள் வாணிபம்

எமது வாடிக்கையாளர்களுக்கு
தைத் திருநாள் நல்
வாழ்த்துக்கள்



வீடுகள்,கட்டடங்கள் கட்டுவதற்கான சகல விதமான தரமான பொருட்களையும் மலிவான விலையில் உத்தரவாதத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

| | |
|---|---|
| முத்துமாரி ஹாட்வெயார்<br>புகையிரத வீதி,<br>பளை<br>021 205 0088, 077 656 0112 | கிளை<br>11GA, இராமநாதன் வீதி,<br>கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.<br>021 720 0756 |






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் கூட்டணி வைத்து விடுதலைப்புலிகளை அழித்தோம்



## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

எத்தனையோ தலைவர்கள் முயற்சி செய்தும் முடிவுக்கு கொண்டுவர முடியாத விடுதலைப்புலிகள் இயக்கத்தை 3 வருட சிறுகாலப் பகுதிக்குள் நாம் முடிவுக்கு கொண்டு வந்தோம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

30 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் நீடித்த யுத்தத்தை நாம் நிறைவுக்கு கொண்டுவந்தோம். அதற்குக் காரணம் புலிகளுக்கு எதிராக சரியான நடவடிக்கைகளை எடுத்ததோடு சரியான தலைவர்களையும் உருவாக்கியமையே ஆகும்.

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்தது மாத்திரமல்லாமல் அதன் பின்னர் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றோம் என்பதை குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும்.

அதேபோல விடுதலைப் புலிகளுடனான யுத்த காலகட்டத்தில் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவர இந்தியாவுக்கு இருந்த முக்கியத்துவத்தினை நாம் நன்றாக அறிந்து வைத்திருந்தோம். அதன்படி இந்தியாவுடன் நேர்த்தியான திட்டங்களை வகுத்து யுத்த வெற்றியையும் பெற்றோம்.

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்ததன் பின்னர் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றோம்.

இராணுவ வீரர்களுக்காக பல்வேறு திட்டங்களையும் வகுத்து அவர்களை கௌரவப்படுத்தினோம்.

கடந்த காலத்தில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து நாட்டை கட்டியெழுப்பிய நிலை தற்போது காணப்படவில்லை. தற்போது நாட்டில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது, மக்கள் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு காரணம் இப்போதைய அரசு நிறுவனங்கள் முறையாக செயற்படாதமையே.

முக்கியமாக நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்ற 30 வருடத்திற்கும் மேலாக நீடித்த யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை காட்டிக்கொடுக்கும் வகையில் சர்வதேசத்திற்கு அடிபணியவைக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக தேர்தல் வாக்குகளை நாம் பயன்படுத்தவேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். பேஸ்புக் சமூக வலைத் தளத்தில் பதிவேற்றியுள்ள காணொலி ஒன்றில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (இ-7)

# மைத்திரியின் முடிவால் ஐ.தே.க. அதிருப்தி



(கொழும்பு)

தமது பதவிக்காலம் தொடர்பாக உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கம் கோரியமை, அவரை ஆட்சியில் அமர்த்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிவில் சமூகத்துக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல,

"தமது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதி விளக்கம் கோருவதற்கு முன்னர் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தால் நல்லது.

இது அரசாங்கத்தின் பங்காளிகளிடையே அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆறு ஆண்டுகள் என்று வந்தாலும் கூட, 5 ஆண்டுகளின் பின்னர் ஜனாதிபதி முன் கூட்டியே தேர்தலை அறிவிக்கும் வாய்ப்பு உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மாணவர்களுக்கான கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி. நந்தகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோண்டாவில் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை பிரதி அதிபர் இ.அருணகிரிவாசன், சிறப்பு விருந்தினராக யாழ்.உதவிக் கல்விப் பணிப்பாளர் த. சிவகுமார், கௌரவ விருந்தினராக பாடசாலை பழைய மாணவி சந்திரா சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சித்தன்கேணி மஹா கணபதி பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் போர்த்தேங்காய் உடைத்தல், கயிறு இழுத்தல், தயிர் முட்டி உடைத்தல் , தலையணை சண்டை மற்றும் சறுக்கு மரம் ஏறுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும் விசேட இன்னிசை நிகழ்வும் இடம்பெறும். (இ-10-17)

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

தெல்லிப்பழை சித்தியம் புளியடி அண்ணமார் ஆலயத்தின் தைப்பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி வழுந்துப் பானை பூசையும் பொங்கலும் இடம்பெற்று அண்ணமார் பெருமான் வெளிவீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும். (இ-10)

## புற்றளை மகாவித்தியாலய சிறுவர் முற்றத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.புற்றளை மகா வித்தியாலயத்தின் பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சியான ஆரம்பமும் சிறுவர் முற்றத் திறப்பு விழாவும் நாளை 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.புற்றளை ம.வி.கேட்போர்கூடத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.சண்முகநாதன் கலந்து கொள்வார். (இ-7)

# மினிசூறாவளியால் 300 வீடுகள் சேதம்



(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் நேற்று முன்தினம் வீசிய மினி சூறாவளியால் சுமார் 300 வீடுகள் கடுமையாகச் சேதமடைந்திருப்பதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

வல்பிட்ட, கட்டுகிரிந்த, சிறிகம்பாத்த, திக்லந்த, அலுகொல்ல ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை சுமார் ஆறு மணியளவில் வீசத் தொடங்கிய இந்தக் கடுங்காற்று, சில நிமிடங்களில் மினி சூறாவளியாக உருவெடுத்தது.

இதையடுத்து, அப்பகுதி மக்கள் அடைக்கலம் தேடி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லத் தொடங்கினர். இதனிடையே இடியுடன் கூடிய மழையும் பெய்ய ஆரம்பித்தது.

காற்றில் மரங்கள் முறிந்து வீடுகள் மீது விழுந்தன. இதில் 300 இற்கும் அதிகமான வீடுகள் கடுமையாகச் சேதமுற்றன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.

பொலிஸ் மற்றும் இராணுவம் மூலம் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டதாக அப்பகுதியின் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## அதிர்ஷ்டலாபச்சீட்டு குலுக்கலும் கலாசார கலை நிகழ்வும் இன்று

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வேம்பாப்புலம் ஞானவைரவர் ஆலய கட்டட நிர்மாணத்திற்கான அதிர்ஷ்டலாபச்சீட்டுக் குலுக்கல் நிகழ்வும் கலாசார கலை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்தில் ஆலய பரிபாலன சபைப் பொறுப்பாளர் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம் விருந்தினராக நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் உப அலுவலக பொறுப்பதிகாரி சிவஸ்ரீ மு.தயாபரக் குருக்கள், புத்தூர் கிழக்கு சமாதான நீத வான் (அகில இலங்கை), பிரசித்த நொத்தாரிசு வே.சுப்பிரமணியம், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஆர்.எம்.பி. ரட் நாயக்க ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# தேய்ந்துவரும் தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர் பிரேமலால் பொன்சேகா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டுள்ளார். ஜனாதிபதியை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முற்பகல் சந்தித்த பிரேமலால் பொன்சேகா, ஊழல், மோசடியற்ற அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த தீர்மானத்தை தான் எடுத்ததாக கூறியுள்ளார்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் படிப்படியாக அந்த முன்னணியில் இருந்து, விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொங்கல் தின நிகழ்வுகளும் பண்பாட்டு வழிபாடும் இன்று

திருமறைக்கலாமன்ற ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் பொங்கல் வைபவமும் காலை 7 மணிக்கு இல. 17, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலாசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

# மார்ச், ஏப்ரலில் அவ்வப்போது மின்தடை

(கொழும்பு)

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடளாவிய ரீதியில் மின் விநியோகத்தில் அவ்வப்போது தடை ஏற்படலாம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீரேந்துப் பகுதிகளில் குறித்த காலப் பகுதியில் கடும் வறட்சி நிலவலாம் என்று எதிர்பார்க்கப்படுவதே இதற்குக் காரணம் என்றும் மின்சார சபை விளக்கமளித்துள்ளது.

"மின் [illegible] தடுக்க உதவியாக மின்சாரத்தை மக்கள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்" என, சக்தி மற்றும் புதுப்பிக்கக் கூடிய சக்தித்துறை அமைச்சின் [illegible] பேச்சாளர் சுலக்சன ஜெயவர்தன கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சீனாவின் பக்கம் செல்ல அனுமதிக்கக் கூடாது

## -இந்திய இராணுவத் தளபதி-



(கொழும்பு)

**இலங்கை போன்ற நாடுகள் சீனாவை நோக்கிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்துள்ளார். இந்திய இராணுவ நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

"சீனா வலிமையான நாடாக இருக்கலாம். ஆனால் இந்தியா பலவீனமான நாடு அல்ல.

பாகிஸ்தான் எல்லையின் மீதுள்ள கவனத்தை இந்தியா சீனாவின் பக்கமும் திருப்ப வேண்டிய தேவை உள்ளது.

எமது அயல்நாடுகள் சீனாவை நோக்கி நகர்வதை அனுமதிக்கக் கூடாது. அயலவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கையை இந்திய அரசாங்கம் காத்திரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

சீனாவைக் கையாளுவதற்கான பரந்துபட்ட மூலோபாயத்தின் ஒரு பகுதியாக நேபாளம், பூட்டான், மியன்மார், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை இந்தியா தன் பக்கம் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாடுகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு இந்தியா முழுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் குடும்பத்தினருடன் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் ஒருவர், இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, நாடு கடத்தப்படுவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக இலங்கை அதிகாரிகளை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

"சுரேஸ்நாத் இரத்தினபாலன் என்ற 48 வயதுடையவர், தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அபுதாபி வழியாக கடந்த 11ஆம் திகதி பிற்பகல் 3.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

குடிவரவு அதிகாரிகளால் அவர்களின் கடவுச்சீட்டுகள் சோதனையிடப்பட்ட போது, சுரேஸ்நாத் இரத்தினபாலனின் பெயர் கறுப்புப்பட்டியலில் இருப்பது கண்டறியப்பட்டது.

அவரது குடும்பத்தினரை இலங்கைக்குள் செல்ல அனுமதி அளிக்கப்பட்ட போதும், அவர்கள், அவருடனேயே இருக்க முடிவு செய்துள்ளனர்.

திருப்பி அனுப்பப்படுவதற்காக அவர்கள் விமான நிலைய இடைத்தங்கல் அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இவர்களை நாடு கடத்தும் உத்தரவை இரத்துச் செய்து, இலங்கைக்குள் நுழைவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஸ்நாத் இரத்தினபாலன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் என்றும், முன்னைய அரசாங்கத்தினால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட புலம்பெயர் தமிழர்களில் ஒருவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக குடிவரவுக் கட்டுப்பாட்டாளரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரனுக்கு மின்னஞ்சல் அனுப்பி, அவரது பதிலுக்கு காத்திருப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஜனாதிபதி, பிரதமரின் படங்களையும் அகற்றுக

## பிரசன்ன கோரிக்கை

(கொழும்பு)



நாடு முழுவதும் உள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் படங்கள் அடங்கிய சகல காட்சிப்படுத்தல்களையும் அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு உத்தரவிடும்படி கூட்டு எதிர்க் கட்சியின் ஏற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவரைக்கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினரின் படங்களை காட்சிப்படுத்தும் போது மட்டும் தேர்தல் சட்டங்களை ஞாபகப்படுத்தும் பொலிஸாருக்கு, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் படங்களையும், பாராளுமன்றத்திலுள்ள அரசாங்க சார்பு உறுப்பினர்களின் படங்களையும் காட்சிப்படுத்தும் போது மட்டும் தேர்தல் சட்டங்கள் ஏன் நினைவுக்கு வருவதில்லையெனவும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# பாடசாலை பெண் அதிபரை மண்டியிட வைக்கவில்லை

## ஊவா முதலமைச்சர் மறுப்பு

(கொழும்பு)



பதுளையில் உள்ள தமிழ் பெண்கள் பாடசாலை அதிபரை முழந்தாளிட வைத்து மன்னிப்புக் கேட்க வைத்ததாக, தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஊவா மாகாண முதலமைச்சர் சாமர தசநாயக்க நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம்தெரிவிக்கையில்,

"இந்து மதத்தைச் சேர்ந்த குறித்த பாடசாலை அதிபர் ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்களைப் பாகுபாடாக நடத்துவதாக முறைப்பாடுகள் வந்தன.

எனவே அவரை எனது அதிகாரபூர்வ வதிவிடத்துக்கு அழைத்து, மாகாண கல்வி அமைச்சின் செயலர், கல்விப் பணிப்பாளர் மற்றும் முறைப்பாடு செய்த பெற்றோர் முன்னிலையில் விசாரித்தேன்.

சமூக நல்லிணக்கத்தைக் குழப்பக் கூடும் என்பதால், அதிபர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மாத்திரம் கேட்டுக் கொண்டேன். நட்பு ரீதியான கலந்துரையாடலுக்குப் பின்னர், பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக் கொண்டோம்.

எனினும் ஜே.வி.பி. மாகாண சபை உறுப்பினர் சமந்த வைத்தியரத்ன, எனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அரசியல் உள்நோக்கத்துடன் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரான ஆர்.பவானியும், ஊவா முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இரண்டு பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைக்காக, தாம் முதலமைச்சரை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் சந்தித்தாகவும், நட்பு ரீதியாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொய்யான பரப்புரைகள் மூலம் அரசியல்வாதிகள் மலிவான அரசியல் இலாபம் தேட முனைவதாகவும் பாடசாலை அதிபர் பவானி தெரிவித்துள்ளார். (இ-7)

## தேர்தல்; பாதுகாப்பு நடவடிக்கைக்கு

# பொலிஸாரை ஆயத்தப்படுத்தும் பணிகளில் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)



தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸாரை ஆயத்தப்படுத்தும் பணிகளில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நேரடியாக களமிறங்கியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது பக்கச்சார்பற்ற முறையிலும் தேர்தல் சட்டங்களை சரியான முறையில் அமுல்படுத்துவது குறித்தும் பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் கூட்டத் தொடர் ஒன்று மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த தெளிவுபடுத்தும் கூட்டத் தொடரில் பொலிஸ்மா அதிபர் நேரடியாக பங்கேற்று விளக்கம் அளித்து வருகின்றார்.

மேல் மற்றும் வட மத்திய மாகாணங்களில் இந்த தெளிவுபடுத்தும் கூட்டம் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் அனைத்து மாகாணங்களிலும் இந்தக் கூட்டத் தொடர் நடத்தப்பட உள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், துணை பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளுக்கு இந்த விளக்கம் அளிக்கப்படவுள்ளது. (இ-7)

# காலி வீதியில் தீப்பிடித்த கார்



(கொழும்பு) கொழும்பு, கொள்ளுப்பிட்டி காலி வீதியால் சென்று கொண்டிருந்த காரொன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகைக்கு எதிர்ப்புறம் கொழும்பு நோக்கி பயணித்த காரொன்றே இவ்வாறு தீப்பிடித்ததாகவும் அதில் பயணித்தவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத போதும் கார் தீயினால் பலத்த சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## மகிந்த அணி நடவடிக்கை



(கொழும்பு)

சபாநாயகர் கருஜெய சூரியவின் நடவடிக்கைக்கு எதிராக கூட்டு எதிரணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைக்க தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட பதற்ற நிலைமைக்கு சபாநாயகரின் நடவடிக்கையே காரணம் என கூட்டு எதிரணி சுட்டிக்காட்டியுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்க ஏற்பாடுகள் நிறை வடைந்துள்ளதாகவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.


கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உடன்படும் சில விடயங்களைக் கூட, பாராளுமன்ற அமர்வுகளில் சபாநாயகர் மாற்றிவிடுவதாகவும் மகிந்த அணி குற்றம்சாட்டியுள்ளது.

சபாநாயகர் சபையில் சகல கட்சிகளுக்கும் பொதுவாக செயற்பட வேண்டியவராக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் கூட்டு எதிர்க்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி கொண்டுவரவுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மக்கள் விடுதலை முன்னணி உட்பட அரசாங்கத்திலுள்ள ஸ்ரீ ல.சு.க. உறுப்பினர்களும் ஆதரவு வழங்கவுள்ளதாகவும் கூட்டு எதிரணி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# பாகிஸ்தான் வர்த்தக கைத்தொழில் கண்காட்சி ஜனாதிபதியால் திறப்பு








(கொழும்பு)

பாகிஸ்தான் வர்த்தக, கைத்தொழில் கண்காட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திறந்து வைத்தார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் இருந்து வரும் நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் பாகிஸ்தான் வர்த்தக அபிவிருத்தி அதிகார சபையும், இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயமும் இணைந்து இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

பொறியியல்துறை, வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள், விவசாய உபகரணங்கள், ஆடைகள், மருந்துப் பொருட்கள், உணவு, ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு உற்பத்திப் பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதுடன், பாகிஸ்தானில் பௌத்த மரபுரிமைகளை எடுத்துக்காட்டும் விசேட காட்சிக்கூட மொன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்.நாடாளுமன்ற தேர்தலில் களமிறங்கப்போகும் வேடுவர்!

(கொழும்பு)

மஹியங்கனை தம்பான பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேடுவர் ஒருவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவோம் என வேடுவத்தலைவர் வன்னியலெந்தோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட நேர்காணல் ஒன்றினை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், சமகால அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக வேடுவ மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இதனால் பிரதேச சபை மற்றும் நாடாளுமன்றத்தில் வேடுவமக்களுக்காக குரல் கொடுக்கும் வகையில் வேடுவ குலத்தில் உள்ள படித்த இளைஞர் ஒருவரை அரசியலில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேடுவ மக்களுக்காக, வேடுவ இளைஞர் ஒருவரை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் களமிறக்கவுள்ளதாக குறிப்பிட்ட வன்னியலெந்தோ, அந்தத் தேர்தலில் அவர் வெற்றிபெறுவாராயின் அது வேடுவ மக்களுக்கே கிடைத்த வெற்றி யாக கருதப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கற்கைநெறி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் மும்மொழி கற்கை நிலையத்தால் இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) டிப்ளோமா மற்றும் அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறி வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கத் தகுதியானோர்:- 2017 இல் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றியோர் மட்டும்.

நிபந்தனைகள்:- ஒருவர் ஒரு கற்கைநெறியினை ஒருமுறை மாத்திரம் தொடர முடியும், கற்கைநெறியினை தொடர விரும்புவர்கள் கற்கை நிலைய ஒழுங்கு விதிகளுக்கமைவான ஒப்பந்தம் ஒன்றினை பணிப்பாளருடன் செய்து கொள்ளுதல் வேண்டும்.

வகுப்புக்கள் நடைபெறும் நேரம்:- வார நாட்களில் மட்டும்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்:- மும்மொழிக் கற்கை நிலையம், யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பிக்கும் முறை:- விண்ணப்பப்படிவத்தினை வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்த á\V www. edumin.np.gov.lk இல்பெற்று பூர்த்தி செய்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 2018.01.30 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ கீழே தரப்பட்டுள்ள முகவரியில் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர், மும்மொழிக் கற்கை நிலையம், யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். மேலதிக விபரங்களிற்கு:- தொலைபேசிஇல, 021 223 1344 என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 65 |
| பச்சைமிளகாய் | 100 | 250 | 200 | 140 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 35 |
| கோவா | 80 | 100 | 80 | 50 |
| கரட் | 120 | 180 | 160 | 100 |
| பூசணி | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | — | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 60 | 100 | 75 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 320 | 260 |
| பெரிய வெங்காயம் | 200 | 100 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 280 | 220 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 180 | 100 | 200 |
| லீக்ஸ் | 200 | — | 240 | 220 |
| பீற்றூட் | 200 | 150 | 160 | 140 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | 1200 | — | — |
| போஞ்சி | 200 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 100 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 20 | 100 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 100 | 150 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 100 | 280 | — | 240 |
| முள்ளங்கி | 100 | 70 | 80 | — |
| பொன்னாங்காணி | 100 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 20 | 50 | 60 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SUN CERAMICS (PVT) LTD

**Importers of Wall Tiles, Floor Tiles & Sanitary Ware, Plumbing Fixtures**




NEW SUN Ceramics (Pvt) Ltd


Floor Tiles, WallTiles மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலைகளில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**புதுவருட விலைக்கழிவு நீடிக்கப்பட்டுள்ளது**


**New Sun Ceramics (PVT) Ltd**
**A-9 Kandy Road, kilinochchi.**
**(Opposite to the Old Hospital)**
**Tel No-021 228 3872**
**Web:newsunceramics.com**

நியூ சன் செரமிக்ஸ் பிறைவேற் லிமிட்டெட்
ஏ-9 கண்டி வீதி, கிளிநொச்சி.
(பழைய வைத்தியசாலை முன்பாக)





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண்ணை ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் வேட்டைத் திருவிழா நேற்றுக் காலை வெகுவிமரிசையாக இடம்பெற்றது.(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# இந்த நாட்டில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவில்லை



(கொழும்பு)

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்ததில்லை என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாலையடி வட்டாரத்திற்கான காரியாலயம் நெல்லிக்காடு கிராமத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையிலே தமிழன் வாழ்கின்றான். அதுவும் உரிமையிழந்து வாழ்கின்றான். தமிழினம் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை இவ்வுலகுக்கு எடுத்துக் காட்டியது ஆயுதப் போராட்டம் தான் என்பதை யாவரும் அறிவோம்.

2009 ஆம் ஆண்டு அந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் இன்றும் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்நாட்டிலே சிங்களம் மட்டும் என்ற சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டதோ, அன்றே தமிழர்கள் ஒடுக்கப்பட்டார்கள்.

இதற்கான ஒரு அரசியல் தீர்வுக்காக பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என இரண்டு ஒப்பந்தங்களும் கிளித்தெறியப்பட்டன.

இதன் காரணத்தினால் இத்தனை இழப்புக்களையும் சந்தித்துக் கொண்டும், தாங்கிக் கொண்டும் இன்று நாங்கள் இந்த நிலையில் இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார். (இ-7)

## தைப்பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தமிழ்சங்கத்தின் ஏற்பாட்டில், முதன்முறையாக பொங்கல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வடமராட்சி வியாபாரிமூலை கலைமணி சனசமூக முன்றலில் இடம்பெறவுள்ளது.

பொங்கல் நிகழ்வை தொடர்ந்து அகில இலங்கை இளங்கோ கழகத்தினரின் பட்டிமன்றமும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அனைவரையும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

## யாழ். நகர உணவகங்கள், ஹோட்டல்கள் கழிவுகளை தரம்பிரித்து வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் 15.01.2018 திங்கட்கிழமை தொடக்கம் உணவகங்கள், உணவு விடுதிகள் என்பவற்றில் உள்ள உணவுக் கழிவுகள் மற்றும் கழிவு லன்சீற்கள், பொலித்தீன் பைகள் என்பவற்றை பெற்றுச் செல்வதற்கு வருகை தரும் போது தங்கள் உணவகங்கள், உணவு விடுதிகளில் உள்ள இத்தகைய கழிவுப் பொருட்களை தரம் பிரித்து வழங்கும்படி யாழ். மாநகரசபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தரம் பிரிக்காது வைக்கப்படும் கழிவுகள் சுகாதாரத் தொழிலாளர்களால் அகற்றப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கழிவுகள் அகற்றப்படாது விடின் தங்கள் உணவகங்கள், உணவு விடுதிகளில் கழிவுகள் தேங்கி பாரிய சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டு தங்களது வியாபார நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படும்.

எனவே இத்தகைய பிரச்சினைகளை நிவர்த்தி செய்து சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு கழிவுகளை தரம் பிரித்து உரிய முறையில் வழங்க வர்த்தகர்களை அறிவுறுத்தும்படி யாழ். மாநகரசபை ஆணையாளர் வணிகர் கழகத்திற்கு அறிவித்துள்ளார்.

எனவே இதனை வர்த்தகர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்படுமாறு யாழ்வணிகர்கழக செயலாளர் ச.சிவகுமரன் அறிவித்துள்ளார். (இ-7)

## மாணவர்கள் மோதல்; சிறு சம்பவமே

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலானது வழமையாக இடம்பெறுகின்ற கருத்து முரண்பாட்டால் ஏற்பட்ட சிறு மோதல் சம்பவமே தவிர வேறெந்தக் காரணமும் இல்லை என யாழ்.பல்கலைக்கழக அனைத்துபீட மாணவர் ஒன்றிய தலைவர் கிருஸ்ணமேனன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற கலைப்பீட மாணவர்களுக்கிடையிலான மோதல் சம்பவம் குறித்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வழமையாக மாணவர்களிடையே இடம்பெறும் சிறிய முரண்பாடே மோதல் சம்பவமாக மாறியிருந்தது. இதனை தேர்தல் காலம் என்பதால் வேறு பிரச்சினையாக திசை திருப்ப சில தீய சக்திகள் முயற்சித்து வருகின்றன. ஆனால் அவ்வாறான எந்த விதமான சம்பவங்களும் இடம்பெறவில்லை.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகமானது ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் தவறிழைத்த மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் 1ஆம், 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைப்பீட மற்றும் சட்டப்பீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் பாடசாலைகள் ஆர்வம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக ஜனவரி 8-14ஆம் திகதி வரையான காலப்பகுதி நல்லிணக்க வாரமாக அமைச்சரவையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் அமைச்சானது கல்வி அமைச்சுடன் இணைந்து சகல பாடசாலைகளிலும் நல்லிணக்கத்தை நிறுவனமயமாக்குவதற்கும் பாடசாலை மாணவர்களிடையே நல்லிணக்கம் மற்றும் நிலைபேறான சமாதானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த சமாதான தூதுவர்களாகவும் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகவும் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுற்றறிக்கையினை அனுப்பியுள்ளது. பல பாடசாலைகள் நல்லிணக்க முன்னெடுப்புகளில் அதிக ஆர்வத்தினை காட்டியுள்ளன என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுடன் இணைந்து தேசிய நல்லிணக்க வாரத்தினை நவரங்ககலமண்டபத்தில் ஒழுங்கு செய்தது. இதில் 1000 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் 100 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் பங்குபற்றியதுடன் நல்லிணக்கத்திற்கான பிரகடனம் மும்மொழிகளிலும் வாசிக்கப்பட்டது.

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான் 7 பிரதான பண்புகள் அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விளங்கப்படுத்தப்பட்டன.

அபிமானமும் கௌரவமும் - ஒவ்வொரு நபரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என விளங்கிக் கொள்வதுடன் அனைவரும் கண்ணியமாக நடத்தப்படுதல் வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளல். எவருக்கும் எச் சூழலிலும் மரியாதை ஒரு உரிமையாகும். பெரியோர்களுக்கும் ஏனையோருக்கும் மதிப்பளியுங்கள். வாக்கிலும் நடத்தையிலும் மரியாதையை பிரதிபலித்தல் வேண்டும்.

பன்மைத்துவம் - பன்மைத்துவத்தை அடையாளங் காணலும் போற்றுதலும் இனம், மதம், மொழி, வெளிப்படைத் தோற்றம், அவரவர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், வாழ்வியல் முறை, நடையுடை பாவனை, அல்லது சிந்திக்கும் விதங்களிலுள்ள பல்வகைமைகளை போற்றுங்கள். பல்வகைமை என்பது செழுமை மிக்கதாகவும் வலிமை மிக்கதாகவும் இனங்காணப்படல் வேண்டும்.

சம உரிமை, உள்ளடக்கப்படுதல், நியாயம் - அனைவரும் பாரபட்சம் காட்டாது சமமாக நடத்தப்படல் வேண்டும். சமவுரிமை மற்றும் சமவாய்ப்புக்களுக்கு உத்தரவாதமளித்தல் மற்றும் சமமான பங்கேற்புக்களை உறுதிப்படுத்தல்.

ஒத்துணர்வு மற்றும் சகிப்புத்தன்மை - தவறுகளை மன்னித்து மறந்துவிடல், வித்தியாசமான கருத்துக்களை இனங்காணல், ஒரு கண்ணோக்கில் மாத்திரம் விடயங்களை நோக்காது, மற்றவர்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் அனுபவங்களையும் புரிந்துகொள்வது மிக முக்கியமானதாகும்.

நட்பும் கருணையும் - எல்லோருடனும் நட்புறவு, ஒத்துழைப்பு, புரிந்துணர்வினைப் பேணல், அனைத்து உயிரினங்களுக்கும் கருணைகாட்டல்.

மனிதாபிமானம் - பிறரின் துயரங்களின் போது அவர்களை ஆதரித்து, அன்புடன் அரவணைத்தல், பரிவு காட்டுதல், செவிசாய்த்தல் மற்றும் அவர்களுடன் நெருங்கி உறவாடுதல்.

நீதி மற்றும் மனித உரிமைகள் - உங்களதும் மற்றவர்களதும் உரிமைக்காக குரல் எழுப்புங்கள். நீதியையும் அதன் நம்பகத் தன்மையையும் நிலைநிறுத்துங்கள். நீங்கள் எக்காரியத்திலும் நீதி வழுவாதீர்கள். நியாயமாகச் செயற்படுங்கள்.

பல் இன, பல்மத, பல்கலாசார மாணவர்களை கொண்ட றோயல் கல்லூரி போன்ற பாடசாலைகளில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான சாதகமான சூழல் காணப்படுகின்றது என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், அமைச்சின் அலுவலர்கள் மற்றும் GIZ அலுவலர்கள் பங்குபற்றினர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர் நடக்குமெனில் இயல் இசை நாடகம் நடக்கும்
திருவறத்தில் செயல் நடக்கும் பார் நடக்கும், படை
நடக்கும் பசி நடக்க மாட்டாதே. ~ *கம்பர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர் திருநாளில் புதுமைப் பொங்கல் பொங்கட்டும்

இன்று தைப்பொங்கல். தமிழர் திருநாள் என்று போற்றப்படும் இந்நாளில் சூரியபகவானுக்கு பொங்கிப் படைத்து நன்றி செலுத்துகின்ற நாள்.

இந்தப் பூமியில் வாழும் மனித சமூகத்துக்கு உணவை ஆக்கித் தரும் விவசாயிகளுக்கு சூரியனே கண்கண்ட தெய்வம்.

சூரியன் இல்லை எனில் உணவுப் பொருட்களின் உற்பத்தியும் இல்லை என்றாகிவிடும்.

எனவே கண்கண்ட தெய்வமாக விளங்கும் சூரியபகவானுக்கு பொங்கிப் படைத்து அவனுக்கு நன்றி செலுத்துவதை தமிழ் மக்கள் தங்கள் தலையாய கடமையாகக் கொண்டனர்.

தமிழர்களின் பண்பாட்டில் நன்றி செலுத்துதல் என்பது முதன்மையானது.

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு* என்று வள்ளுவர் கூறியதற்குள், தமிழ் மக்கள் நன்றி செலுத்துவதில் எத்துணை தூரம் கவனம் செலுத்தினர் என்பது தெரிய வரும்.

நிலத்தை உழுது பயிரிட்டு உணவுக்கு வழி வகுத்த விவசாயிகள் தங்களின் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த சூரியபகவானுக்கு புத்தரிசி எடுத்து பொங்கல் செய்து தம் விளை நிலங்களில் உற்பத்தியாகிய தானியங்களையெல்லாம் படையலாக்கி சூரியனை வழிபட்டு தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வர்.

சூரியனுக்கு நன்றி தெரிவிக்கின்ற உயர்ந்த பண்பாடு தமிழர்களிடம் இருப்பதன் காரணமாக அவர்கள் இயற்கையை எந்தளவு தூரம் போற்றினர் என்பதும் தமிழர் என்ற இனம் வேளாண்மை செய்வதை தெய்வீகப் பணியாக நினைத்தனர் என்பதும் இதனூடு விளங்கிக் கொள்ள முடியும்.

எனினும் இன்றைய சமகாலத்தில் பொங்கலுக்கான அத்தனை பொருட்களும் வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்வதைக் காண முடிகின்றது.

வீட்டின் களஞ்சிய அறையில் இருந்து நெல்லும் பயறு, உழுந்து உள்ளிட்ட தானியங்களும் வீட்டு வளவில் விளைந்து முற்றிய முக்கனிகளும் கிணற்றடியில் ஓங்கி வளர்ந்த கரும்பும் கமுகம் பாக்கும் வெற்றிலையும் முற்றத்துத் தென்னை தந்த இளநீரும் பின்வளவில் கட்டி நிற்கும் பசு தந்த பாலுமாகப் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைத்து;

அயல் அட்டம் உறவுகள் எனத் தேடிச் சென்று இன்சுவை பொருந்திய பொங்கல் கொடுத்து பிறந்த தைத் திங்கள் இனிமையாகட்டும் என்று வாழ்ந்த எங்கள் வாழ்வு எங்கே என்பது கேட்குமளவில் நிலைமையாயிற்று.

வேளாண்மை செய்த மரபெல்லாம் மறைந்தோடி; பசு வளர்த்து பால் கறந்து கற்கண்டு கலந்து பருகிய காலமெல்லாம் போய்,

இப்போது மில் அரிசியும் உடைத்து வறுத்து பொலித்தீனில் அடைத்த பயறும் பைக்கற் பாலுமாகப் பொதி செய்த பொட்டலத்தை அவிழ்த்து அதனைப் பொங்கிப் படைத்து பொங்கல் கொண்டாடும் நிலையை நாம் மாற்றுவது எங்ஙனமோ என்று ஏங்கினாலும் இன்றைய தைப் பொங்கல் தமிழர்களுக்கு புதுமை செய்யட்டும் எனப் பிரார்த்திப்போமாக.

## வீதியில் பொங்கல் கொண்டாடவுள்ள கேப்பாப்புலவு மக்கள்

(முல்லைத்தீவு)

உழவர்களின் திருநாளான தைத் திருநாளை வீதியில் பொங்கல் பொங்கி கொண்டாடவுள்ளதாக கேப்பாப்புலவு நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கமானது தம்மை வீதியில் பொங்கல் கொண்டாடும் நிலைக்கு தள்ளியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கேப்பாப்புலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த 28 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

இதன்போது கேப்பாபுலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன.

எனினும் காணி விடுவிக்கப்படாத 104 குடும்பங்களது 181 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர்ந்து நேற்று 319 ஆவது நாளாக போராடி வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கமானது தம்மை வீதியில் தைப்பொங்கல் கொண்டாட வைத்துள்ளதாக கண்ணீருடன் தெரிவித்தனர்.

அத்துடன் தாம் அரசாங்கத்திற்கு எதிராகவோ இலங்கை இராணுவத்திற்கு எதிராகவோ போராடவில்லை. மாறாக தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-281)

## ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு ஐ.தே.க அதிருப்தி

தமது பதவிக்காலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கம் கோரியமை, அவரை ஆட்சியில் அமர்த்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிவில் சமூகத்துக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல,

"தமது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதி விளக்கம் கோருவதற்கு முன்னர், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தால் நல்லது.

இது அரசாங்கத்தின் பங்காளிகளிடையே அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆறு ஆண்டுகள் என்று வந்தாலும் கூட, 5 ஆண்டுகளின பின்னர், ஜனாதிபதி முன்கூட்டியே தேர்தலை அறிவிக்கும் வாய்ப்பு உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## தேர்தல் விதிமுறை மீறல் முல்லையில் 18 பதிவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் இதுவரை பதினெட்டு சம்பவங்கள் முறைப்பாடாக கிடைக்கப் பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுககாய் மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் பல்வேறு கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இன்று வரையான காலத்தில் பதினெட்டு தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அதில் விஸ்வமடு பகுதியில் வேட்புமனுவில் கையொப்பமிட விடாது பெண் வேட்பாளரை கடத்திய சம்பவம் தொடக்கம் பதினெட்டு தேர்தல் விதிமுறை சம்பவங்கள் பதிவாகியுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-281)

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி

### தேவஸ்தானத்தின் கோபூஜை நிகழ்வு

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் கோபூஜை நிகழ்வுகள் நாளை 15/01/2018 திங்கட்கிழமை பி.ப 2.00 மணி முதல் நடைபெற உள்ளது

இந்நிகழ்விற்கு இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)

## இலங்கையின் நிலைமையை பார்த்து வியப்பில் ஆழ்ந்த இந்திய ஊடகவியலாளர்

இலங்கையில் போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் நிலவிய பதற்றகரமான சூழல் எங்ஙனம் மாற்றமடைந்து விட்டன என்பதை வியப்புடன் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார் இந்திய ஊடகவியலாளர் ஆர். கே. ராதாகிருஷ்ணன்.

இலங்கையில் போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 2009ஆம் ஆண்டு முதல் சுமார் 3 வருடகாலப் பகுதி இந்தியாவின் ஹிந்து ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்பு செய்தியாளராக இருந்தவர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன்.

தமிழக அரசியல் தொடர்பான தொலைக்காட்சி விவாதங்களில் முக்கிய விவாதியாக பல தொலைக்காட்சிகளில் தோன்றிப் பேசி வரும் ஆர்.கே. தற்போது சிறிய விடுமுறையில் இலங்கை வந்துள்ளார்.

நேற்றைய தினம் சுதந்திர சதுக்கத்தில் உடற்பயிற்சிக்காக சென்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பாதுகாப்பு வீரர்கள் சகிதம் அங்கே நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததை எதிரே கண்ணுற்றுள்ளார்.

அப்போது எந்த பாதுகாப்பு நெருக்குவாரங்களும் பதற்றமும் இல்லாமல் ஜனாதிபதியும் அவரது பாது காப்பு தரப்பினரும் இருந்ததைப் பார்த்ததாகவும் மிகவும் நிம்மதியாக அவர்கள் இருந்ததாகவும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இந்த நாட்டில் வழமை நிலை திருமபிவிட்டதாக காண்பிக்க முனைந்ததாகவும் ஆனால் அவரை அக்காலத்தில் இவ்வாறு கண்ணுற்ற போதுபாதுகாப்பு தரப்பினர் மிகவும் பதறத்துடன் இருந்ததையும் நினைவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறு நிலைமைகள் இலங்கையில் எங்ஙனம் மாறி விட்டன என தனது டுவிட்டர் பதிவில் ஆர்.கே. குறிப்பிட்டுள்ளார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தைகளின் அறிவு வளர்ச்சி அதிகரிக்க என்ன செய்யவேண்டும்?

குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி குறைவாக இருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கான பரிகாரங்களைச் செய்ய வேண்டும். கல்விக்கான கிரகம் புதனாகும். ஜாதகத்தில் புதன் மோசமாக இடத்தில் இருந்தால் கிரகதோசம் மாறுவதற்கான கர்மங்களைச் செய்யவேண்டும். ஜோதிடப் பரிகாரம் கூறப்படும் பூஜைகள் செய்வது, கயிறு போன்றவைகளை மந்திரித்துக் கட்டுவது போன்றவற்றைச் செயதால் தோஷம் விலகி அமைதி கிடைக்கும். கல்வியைக கற்று முடிப்பதுவரை கல்விராஜ கோபால எந்திரத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்களை வைத்து பூஜை செய்து அணிந்து கொள்ளச் சொல்வது நல்லதாகும்.

இறைவனின் அருள் கிடைப்பதற்கான கர்மங்களைச் செய்வதற்கு குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். ஏனென்றால் இறைவனது அருளால் வெல்ல துடியாத எந்த ஒரு காரியமும் பூமியில் இல்லை. மேலும் அறிவு வளர்ச்சியில்லாத குழந்தைகள், தங்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் விஷ்ணுவை தொடர்ந்து வணங்கி வருதல் நல்லதாகும். அதிகாலையில் நீராடுவது உத்தமமான மருந்துக்குச் சமம் என்று கூறுவார்கள். குழந்தைகளை அதிகாலையில் எழுந்து கு[illegible] அறிவு வள[illegible] (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி காயம்

யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் தனியார் கல்வி நிலையத்திற்கு சென்று வந்த மாணவி மீது மோட்டார் சைககிளில் சென்ற இளைஞர் மோதியதில் மாணவி காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில மட்டுவில் வேலுப்பிள்ளை சனசமூக நிலையத்திற்கு அருகல்இடம்பெற்றது. இச்சம்பவத்தில் மட்டுவில் பகுதியில் வசித்துவரும் 10 வ்யதுடைய சண்முகராசு திரிஷிகா என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருத புரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களிலும வவுனியா பிரதேசத்தில கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கிளிநொச்சியில் 215 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்

## உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள 3 பிரதேச சபைகளுக்கான தேர்தலில் 40 வட்டாரங்களில் போட்டியிடும் 638 வேட்பாளர்களில் 215 பெண் வேட்பாளர்கள் (33.7 வீதமான) போட்டியிடுகின்றமையானது கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டுவதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள் உள்ளூராட்சி சபைகளின் தேர்தலின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதன் போது கரைச்சிப் பிரதேச சபைக்கான 21 வட்டாரங்களில் 342 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற நிலையில் இவர்களில் 109 வேட்பாளர்கள் பெண்களாக உள்ள நிலையில் தமக்கான உறுப்பினர்களை தேர்வு செய்வதற்காக 61 ஆயிரத்து 315 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். இதேபோன்று, பூநகரி பிரதேச சபைக்கான 11 வட்டாரங்களில் 168 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், இவர்களில் 59 பேர் பெண்களாக உள்ள நிலையில் தமக்கான பிரதேச சபையின் உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 15 ஆயிரத்து 199 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இந்நிலையில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான 8 வட்டாரங்களில் 168 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், இவர்களில் 47 பேர் பெண்களாக உள்ள நிலையில், தமக்கான பிரதேச சபைக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 10 ஆயிரத்து 220 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.(2-15)

# கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பில் 12,043 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்

## முல்லை. மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள 23 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் 12 ஆயிரத்து 42 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்க வேண்டியுள்ளதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி ஜெயபவானி கணேசமுர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ளவர்களில் சமுர்த்தி பெறத் தகுதியான 6715 பேருக்கு எந்தவிதக் கொடுப்பனவுகளுமின்றி அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உடனடியாக இவர்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட திணைக்களம் இதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் கருத்துத் தெரிவித்த மாவட்ட சமுர்த்தி உதவியாணையாளர், சமுர்த்திக் கொடுப்பனவு என்பது மாவட்டத்தில் பாரிய பிரச்சினையாகவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 ஆயிரத்து 211 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள போதும், 11 ஆயிரத்து 58 பேருக்கு மட்டுமே சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த சமுர்த்திக் கொடுப்பனவுகள் கரைதுறைப்பற்றில் மூன்று சமுர்த்தி வங்கிகள் ஊடாகவும் புதுக்குடியிருப்பில் இரண்டு வங்கிகள் ஊடாகவும் ஒட்டுசுட்டான் பகுதியில் இரண்டு வங்கிகள் ஊடாகவும் மாந்தை கிழக்கு, துணுக்காய்,வெலிஓயா ஆகிய பகுதிகளிலும் ஒவ்வொரு வங்கிகள் ஊடாகவும் பத்து வங்கிகள் மூலம் இந்தக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சமுர்த்திக் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படுகின்ற போது அப்போது மீள்குடியேற்றம் செய்யப்படாத கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் 23 கிராம அலுவலர் பிரிவுகள் இவ்வாறு சமுர்த்திக் கொடுப்பனவுகளுக்குள் உள்வாங்கப்படவில்லை.

கடந்த ஆண்டில் 23ஆயிரம் பேருக்கான விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.இதில் 12ஆயிரத்து 42 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்க வேண்டியுள்ளது.இதிலும் உடனடியாக 6 ஆயிரத்து 715 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகளை மிக அவசரமாக வழங்க வேண் டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-315)



# நோய்களுக்கான மருந்து வழங்கலும் மூக்குக் கண்ணாடி வழங்கி வைப்பும்



(பனிக்கன்குளம்)

வவுனியா நெளுக்குளம் கணேசபுரம் பிரதான வீதியிலுள்ள உலக இரட்சகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் மருத்துவ முகாம் இடம்பெற்றுள்ளது. வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அலுவலகத்தின் பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான அனுசரணையில் இடம்பெற்ற ஒரு நாள் மருத்துவ முகாமில் 40 வயது முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல், ஏனைய நோய்களுக்கான மருந்து வழங்கல் போன்ற சேவைகள் இடம்பெற்றன.

அண்மையில் வவுனியா நெளுக்குளம் ஈசன்கோட்டம் பகுதியில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனம் காணப்பட்டுள்ளதையடுத்து மருத்துவ முகாமினை ஏற்பாடு செய்துள்ளதாகவும் இப்பகுதியிலுள்ள பெருமளவானோர் இந்த மருத்துவ முகாமில் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

இந் நிகழ்வில் நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மருத்துவ முகாமினை ஆரம்பித்து வைத்தார். பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டு சேவைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். (2-281)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டம் தேசியமட்டத்தில் இரண்டாமிடம்

(மல்லாவி)

2017 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டம் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 3, பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 69.80 சதவீதமாகவுள்ளதால், அகில இலங்கை ரீதியாக 02, ஆவது இடத்தை முல்லைத்தீவு மாவட்டம் பெற் றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து இம்முறை பரீட்சைக்குத் தோற்றியோர் 990 பேர். இவர்களில் 3 பாடங்களிலும் சித்தியடைந்தோர் 691,பேர் ஆகும்.இது நூற்றுக்கு 69.80 சதவீதமாகும்.

இந்நிலையில், எந்த வொரு பாடத்திலும் சித்தியடையாதோர் தொகை 65 பேராக உள்ளது. இது நூற்றுக்கு 6.57 சதவீதமாகாக காணப்படுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை ரீதியாக பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மற்றும் தனியார் ரீதியாக பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுமாக பரீட்சைக்குத் தோற்றிய மொத்த தொகை ஆயிரத்து 211 பேர் ஆகும்.

இவர்களில் 3, பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் தொகை 805 பேர் ஆகும்.

இது நூற்றுக்கு 66.47 சதவீதமாக உள்ளது.

இதேவேளை, எந்த வொரு பாடத்திலும் சித்தியடையாதோர் தொகை 90 பேராகும்.

இது நூற்றுக்கு 7.43 சதவீதமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பெறுபேறுகளின் படி அகில இலங்கை ரீதியாக உள்ள 25 மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமானது 5 ஆம் இடத்தில் உள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இதேவேளை, அகில இலங்கை ரீதியாக உள்ள 25, மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்தில் 03, பாடங்களிலும் சித்தியடைந்த பாடசாலை பரீட்சார்த்திகளின் முடிவுகளின் அடிப்படையில் 72.57 சதவீதமாகவும், தனியார் பரீட்சார்த்திகளின் முடிவுகளின் அடிப்படையில் 68.41, சதவீதமாகவும் காணப்பட்ட முடிவுகளின் படி மன்னார் மாவட்டம் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளது. (2-15)

# தைப்பொங்கல் வியாபாரத்தில் நேற்று வவுனியா வர்த்தகர்கள் மும்மரமாக ஈடுபாடு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தைப்பொங்கல் வியாபாரம் இம்முறை களை கட்டியதையடுத்து நகரின் மத்திய பகுதியில் பொங்கல் பொருட்கள் கொள்வனவில் பொதுமக்கள் ஈடுபட்டு வருவதுடன் போக்குவரத்து நெரிசல் நேற்று அதிகமாக காணப்பட்டது. பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர். (2-281)



# கிளிநொச்சியில் தைப்பொங்கல் வியாபாரம் களைகட்டவில்லை

## பொருட்களை கொள்வனவு செய்தவர்கள் மிகக்குறைவு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கடந்த காலங்களைப் போலல்லாது தைப்பொங்கல் வியாபாரம் களைகட்டவில்லையென வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வரட்சி மற்றும் இயற்கையின் தாக்கங்களால் விவசாயிகள் மட்டத்தில் தொடர்ச்சியான பாதிப்புக்கள் இவற்றினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த காலத்தைப்போன்று இம்முறை தைப்பொங்கல் வியாபாரம்களைகட்டவில்லையெனவும் பொருட்களை கொள்வனவு செய்பவர்களுடைய தொகை மிகக்குறைவாக இருப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# அறுவடைப் பெருவிழாவும் புதிர்ப்பொங்கலும்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை அரசர்பதி ஸ்ரீ கண்ணகை அம்மன் பொற்கோவில் அறுவடைப் பெருவிழாவும் புதிர்ப் பொங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பொற்கோவில் முன்றலில் நடைபெறும். பாரம்பரிய முறைப்படி அன்றைய தினம் வயலில் அறுவடை செய்த நெல்மாட்டு வண்டியில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஆலய முன்றலில் பாரம்பரிய முறையில் குற்றி அரிசியாக்கப்பட்டு விசேட பொங்கல் நிகழ்வு நடைபெறும்.

இதில் புதிர் வெட்டுதல், கலை நிகழ்ச்சிகள், உறி உடைத்தல் ஆகியவை இடம் பெறும். சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வந்து அருள் பாலிப்பார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37ஆவது ஐ.நா கூட்டத்...

துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. சபையின் 37ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி முதல் மார்ச் 23ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது, இலங்கையின் பொறுப்புக் கூறல் பொறிமுறை தாமதமடைந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்தும் ஆணையாளர் இதன்போது தெளிவுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹுசைனின் இலங்கை குறித்த அறிக்கையை தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது. இதனை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஜெனிவா பிரேரணையை அமுல்படுத்துவதிலுள்ள சவால்கள் குறித்தும் இலங்கை ஐ.நா.வை தெளிவுபடுத்தவுள்ளது. (ம)

## வவுனியாவிலும்...

ள்ளதுடன் அதிக சத்தத்துடன் வீதியால் சென்றவர்களை திரும்பிப்பார்க்கும் அளவிற்கு இருந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

நேற்று பிற்பகல் வேளையில் பண்டாரிக்குளம் பகுதியில் தமிழ்க் கட்சி ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் அலுவலகத்திலே இவ்வாறு ஒலிபரப்பப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் இவ்வாறு புரட்சிப் பாடல்களை ஒலிபரப்பி தாங்கள் விடுதலை உணர்வாளர்கள் என மக்களுக்குத் தெரியப்படுத்தி வாக்குவேட்டை பெறும் நோக்கிலே இவ்வாறு நடைபெற்றுவருவதாகவும் இதற்கு பொதுமக்கள் வசிய மாட்டார்கள் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலும் இவ்வாறு புரட்சிப்பாடல்களை ஒலிபரப்பி தேர்தலில் வாக்கு பெறும் உத்திகளை அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ம-281)

## அமைச்சரவையில்...

சிறிசேன கவனம் செலுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி மத்திய வங்கி முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம் பெறும் அரசியல் நிகழ்வுகளை அவதானித்து இந்த மாற்றத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

தேர்தலின் முடிவுகளையும் இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதி அவதானத்தில் எடுத்துக் கொள்வார் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ம)

## அடுத்த வாரம்...

நிறுவனங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகள் சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அடுத்தவாரம் நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் விமான நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள மோசடிகள் சம்பந்தமாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதாக ஏற்கெனவே ஜனாதிபதி அறிவித்திருந்தார். (ம)

## அமெரிக்க தூது...

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேசாப்புக்கும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரஞ்ஜித் சிங் சந்துவை வட மாகாண முதலமைச்சர் நேற்றுமுன்தினம் சந்தித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க தூதுவரை விக்னேவஸ்ரன் நேற்று சந்தித்துள்ளார்.

எனினும், சந்திப்பு குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. (ம)

## மண் அள்ளி தூற்றி...

தாயகத்தில் கையளித்தும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் 324 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் நேற்று இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைக்கு முன்பாக கதறியழுத காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்களை காட்டி இவர்கள் துரோகிகள் எனவும் கதறியழுது மண்ணால் தூவியிருந்தனர்.

இதேவேளை பதாகையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்களுக்கு அடித்தும் அதற்கு முன்பாக இருந்து ஒப்பாரி வைத்த தாய்மார் இவர்களாலேயே தமது பிள்ளைகள் வெளிவராமல் உள்ளனர் எனவும் தெரிவித்ததுடன் ஜனாதிபதியின் சந்திப்பின்போது சுமந்திரன் எம்.பி குழப்பத்தை ஏற்படுத்தியதாகவும், சுமந்திரன் ஒரு துரோகி எனவும் தெரிவித்து கதறியழுததுடன் பல தாய்மார் மயக்கமுற்றும் வீழ்ந்தனர்.

• இந் நிலையில் இன்றை தினம் பொங்கல் திருநாள் கொண்டாடப்படவுள்ள நிலையில் தமது பிள்ளைகள் வருவார்களா என்ற ஏக்கத்தினையும் வெளியிட்டிருந்தனர்.(ம-250,281)

## ராஜக்ஷவை பாது...

ளுக்கு வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளதாக பேராசிரியர் சரத் விஜயசூரிய சாடியுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் பேராசிரியர் சரத் விஜயசூரிய எழுதிய நாவல் ஒன்றின் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிட்ட சரத் விஜயசூரிய, ஊழல் மற்றும் குற்றங்கள் இழைத்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களை சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முயற்சிப்பதாக கூறியுள்ளார்.

ஜனாதிபதியை தோற்கடிப்பதற்காக உயிரைப் பணயம் வைத்து செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களை சட்டத்தின் பிடியில் இருந்து விலக்குவதற்கு அரசியல் ரீதியான அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் தான் 20 வருடங்கள் ஆட்சி நடந்தது என்பது ஜனாதிபதிக்கு ஞாபகம் இல்லையா? சந்திரிக்காவின் காலம் அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் காலம். மோசடிகள் இடம்பெற்றிருக்குமானால் குற்றங்கள் இடம்பெற்றிருக்குமானால் அந்த 20 வருடங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

அந்த நபர்களின் மோசடிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பிலேயே நாட்டு மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. ஜனாதிபதியை தோற்கடிக்க உயிரை பணயம் வைத்து செயற்பட்டவர்களை சட்டத்தின் கயிற்றால் கட்டாமல் விடுவதற்கு அரசியல் அழுத்தங்களே காரணம என்பது இன்று எமக்கு விளங்குகின்றது.

பிணைமுறி விவகார மோசடி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலும் இடம்பெற்றதாக குறிப்பிட்ட சரத் விஜயசூரிய, பிணைமுறி விவகார மோசடி தொடர்பான ஆணைக்குழுவை அமைக்கும் போது ஏன் 2015ஆம ஆண்டுக்கு முன்புள்ளவற்றையும் விசாரிக்குமாறு ஜனாதிபதியை பிரதமர் ஏன் கோரவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்களை காப்பற்ற முயற்சிப்பதாக பேராசிரியர் சரத் விஜயசூரிய மேலும் குற்றஞ்சாட்டினார்.

பிணைமுறி விவகார ஆணைக்குழு அமைக்கப்பட்டதால் முக்கியமான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் எமக்குள்ள பிரச்சின்னை என்னவென்றால் 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் மாத்திரமா பிணைமுறி மோசடி இடம்பெற்றது. இல்லை. அதற்கு முன்னர் இருந்தே இவ்வாறான மோசடி இடம் பெற்றிருக்கின்றது. அன்று தொடக்கம் பிணைமுறி விற்பனையில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரிப்பதற்கு ஆணைக் குழுவை அமைக்குமாறு ஏன் ஜனாதிபதியை பிரதமர் கோரவில்லை. அது தொடர்பில் ஆராயுமாறு ஏன் கேட்கவில்லை. ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்கே பிரதமர் அவ்வாறு செய்தார் என நான் குற்றஞ்சாட்டுகின்றேன்.

அவ்வாறு அரசியல் செய்வது சிறந்தது அல்ல. இன்று வரை இரண்டு பக்கமும் ராஜபக்ஷக்களை பிரதமர் பாதுகாக்கின்றார் என்ற எண்ணம் தோற்றம் பெற்றுள்ளது. செல்வந்தர் ஒருவரின் மரண வீட்டிற்கு சென்ற ராஜபக்ஷ இளவரசர், அமைச்சர் சாகல ரத்நாயக்கவை கட்டியணைத்து சாகல அண்ணா Thank You என கூறியுள்ளார். ஏன் அந்த Thank You. காலத்தை வீணடிப்பதற்காக ஆணைக்குழுவை அமைத்தனர். யாரை ஏமாற்றுகின்றனர்.

இந்த நாட்டு மக்களை ஏமாற்றுகின்றனர். சட்டத்தை அமுல்படுத்த உள்ளார்ந்த எண்ணம் இருக்குமாயின் இது தொடர்பில் வழக்கு தொடர்வதற்கு சுயாதீன நீதிமன்றத்தை நியமிக்குமாறு அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததில் இருந்து கூறுகின்றோம். எனினும் இதுவரை அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நீதிமன்றம் எப்போது நியமிக்கப்படும்? எப்போது இந்த வழக்குகள் விசாரிக்கப்படும்? இது பாரதூரமான நிலைமை.

இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைதுசெய்ய மூன்று தடவைகள் குற்றப்புலனாய்வு பிரிவினர் முயற்சி செய்த போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தியதாக சரத் விஜயசூரிய மேலும் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் நீண்டகாலமாக இடம் பெற்ற யுத்தம் தொடர்பில் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.இந்த யுத்தத்தை கிராமத்திலுள்ள ஏழையான இளைஞர்களே வெற்றி கொண்டார்கள்.உயிர்களை தியாகம் செய்தனர். இந்த நாட்டின் ஏழை பெண்களுக்கு தாய்மார் இல்லாது போனார்கள். ஏழை பெண்களின் கணவன்மார் உயிரிழந்தனர். ஏழை குழந்தைகளின் தந்தையர கொல்லப்பட்டனர். யுத்தத்தின் பின்னர் பலம்பெற்ற நபர்கள் நேரம் வந்த பின்னர் வாய்ப்பை பயன்படுத்த ஆரம்பித்தனர். யுத்தத்தின் பின்னரே இளைஞர்களை கடத்திச்சென்றனர்.கப்பம் பெறுவதற்கே இந்த இளைஞர்கள் கடத்தப்பட்டனர் என்பது தெரியவந்துள்ளது.இந்த குற்றத்தை 12 பேரே இழைத்துள்ளனர்.

12 பேரே இந்த அனைத்து குற்றங்களையும் செய்துள்ளனர்.இந்த அனைத்து குற்றங்களுக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும்.இது தொடர்பில் சட்டரீதியான எந்தவொரு நடவடிக்கையையும் அவர் மேற்கொள்ளவில்லை.அவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அரைவாசிக் கட்டத்தை எட்டியுள்ளது. மூன்றாவது முறையாக அவரை கைதுசெய்வதற்கு அதற்குரிய தரப்பினர் முயற்சி செய்தனர்.

அது முடியவில்லை.அவ்வாறாயின் இந்த நாட்டின் சட்டம் மற்றும் நியாயம் அனைவருக்கும் ஒரேமாதிரி நடைமுறைப்படுத்தப் படுகின்றது என கூற முடியும்? ஆட்கொலை புரிந்தவர்கள் இராணுவவீரர்கள் ஆக முடியாது? உயிரை தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு இழைக்கும் பாரிய அவமானமே, ஆட்கொலை புரிந்தவர்களை பாதுகாப்பதற்கு அரசியல் அதிகாரத்தை பயன்படுத்துவது. இவ்வாறான விடயங்கள் மாறுபட வேண்டும். (ம)

## ஐக்கிய தேசியக் கட்சி திருடர்களை பாதுகாக்காது

(கொழும்பு)

முறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் தாம் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகுவதாக பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கோட்டை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனை தெரிவித்தார்.


ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் யாரேனும் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் யாரேனும் பாதுகாக்கப்படுவார்களேயானால் ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகிப்பதில் பயன் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி திருடர்களை பாதுகாக்கும் கட்சியாக செயற்படும் கட்சியல்லவென ஹர்ஷ டி சில்வா இதன்போது குறிப்பிட்டார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வைத்தியகலாநிதி
குமாரசாமி மகேசன்
தோற்றம்:-18.11.1947
மறைவு:-14.01.2017
தங்கள் வைத்திய சேவைக்கு நிகராக
இன்று வரை யாரும் இல்லை
உங்களை இழந்த துயரை நாம்
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்.
எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்த எம் தெய்வமே!
ஆண்டொன்று கடந்தும்
ஆறவில்லை எம் துயரம்
(2258)
Dr.கு.மகேசன் அவர்களின் முதலாமாண்டு
நினைவினை நெஞ்சார நினைவு கூருகின்றோம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நற்குணம் சரஸ்வதிதேவி (தங்கா)

கரணவாய் வடக்கை பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நற்குணம் சரஸ்வதிதேவி கடந்த (11.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நற்குணம் அவர்களின் பாசமிகு மனைவியும், சாயிசங்கர் (பிரான்ஸ்), சாயிபானு (லண்டன்), சாயிகீதா, சாயிமீரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்சினி, வேலழகன் (லண்டன்), இரமணகிருஸ்ணா (வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி), வைகுந்தன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சியாம்ளன், நவீணா, ரஸ்வினி, விஷாகணன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற பாலசுந்தரம், திலகவதி (கனடா), Dr.உமாபதிசிவம், புஸ்பவனநாதன் (கனடா), சிவசுப்பிரமணியம், கிஸ்ணமூர்த்தி (கனடா), விஜயலஷ்மி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
021 224 0315

தகவல்:
குடும்பத்தினர்

(2402)

# வட்டக்கச்சி...

யுனிட் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 30 லீற்றர் கசிப்பை பொங்கல் தினத்தன்று விற்பனை செய்யும் நோக்கோடு வீடு ஒன்றில் உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் 3 பேரைக் கைது செய்துள்ளதாக வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என்.சதுரங்கா தெவித்துள்ளார். இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து இராமநாதபுரம் 5-ம் யுனிட் கிராமக்குடியிருப்பு வீடு ஒன்றில் உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் சம்பவ இடத்தில் வைத்து 03 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம-15)


**PHYSICS CLASS**

உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் வகுப்புக்கள் (குழு, தனிப்பட்ட) தமிழ், ஆங்கில மொழிமூலம் பௌதிகவியல் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

Ramanan (B.Sc (Hons) in Physics)
தொடர்பு: 0776470614
(2276)

**இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்**

பழமை பேசாதே தமிழா
பழமை மறக்காதே தோழா
இப்பூவுலகில் தன் நிலை உயர
வீறு கொண்டு எழுந்து வர
விவேகமாய் நிமிர்ந்து வர
பொங்குக பொங்கல்

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(அ-12204)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- வம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1120)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

**வைத்தியராகும் கனவினை வெல்லுங்கள்...!**

**Study Medicine In Russia / Europe**

KURSK STATE MEDICAL UNIVERSITY
GOMEL STATE MEDICAL UNIVERSITY
TVER STATE MEDICAL UNIVERSITY
RIGA TECHNICAL UNIVERSITY LATVIA

*intake on February & September*

- துரிதமானதும் நம்பிக்கையானதுமான அனுமதிகள்.
- தற்போது குறித்த பல்கலைக்கழகங்களில் பாடநெறிகளைத் தொடரும் வைத்திய மாணவர்களது ஆலோசனைகள்.
- பாடநெறியைப் பூர்த்தி செய்து நாடு திரும்பிய வைத்தியர்களின் வழிகாட்டுதல்கள் என்பன ஒழுங்கு செய்து தரப்படும்.

Full English Medium
No IELTS Required

studyrussia2015@gmail.com

பெப்ரவரி மாத அனுமதிகளைப் பெற அழையுங்கள்: 077 296 6980, 077 060 0850

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# SB Travels and Tours (Pvt) Ltd

கொழும்பில் பிரபல்யமாக இயங்கிவருவதும் Air ticketing இன் நேரடி முகவராக செயற்படுவதுமான SB Travels and Tours (Pvt) Ltd தற்போது யாழ்.மண்ணில்
**No.212, கஸ்தூரியார் வீதியில்**
தனது கிளையை விஸ்தரித்துள்ளது.

இங்கு இந்தியா, மலேசியா, பாங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களும் சுற்றுலா ஒழுங்கமைப்பு, Hotel முன்னேற்பாடுகள், பிரயாணக் காப்புறுதி, பிரயாண திகதி மாற்றம் போன்றனவும் செய்து தரப்படும்.

**தைப்பொங்கலை முன்னிட்டு**

எமது நிறுவனத்தில் அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகின்றோம்.

சென்னை : 18800/=
மதுரை : 19500/=
பெங்களூரு : 18800/=

இடைத் தரகர்கள் தேவையில்லை

ஒரு முறை எமது நிறுவனத்துக்கு வருகை தந்து பாருங்கள்

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| **Branch:** No.212, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 222 8555 | **Branch:** No.166, Temple Road, Nallur, Jaffna. T.P: 021 222 7666 |
| **Head Office:** No.324, Aluthmawatha Road, Modara, Colombo - 15 T.P : 011 254 0280 | **Branch:** No.132, Sri Kathiresan Street, Colombo - 13 T.P : 011 233 3322 |

(2364)

9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

www.jitf.lk
jitf.lk
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2018
9TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

26 27 28 ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna

(அ-1211)

**தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**



காட்சிக்கூட பதிவுகளுக்கு அழைக்கவும்
+94 71 7488107

ORGANIZED BY LECS LANKA EXHIBITION
MAIN SPONSOR S-Lon
IN ASSOCIATION WITH CCIY
OFFICIAL PARTNERS
ANTON RUHUNU FOODS INSEE DAN Mobil
ORGANIZED BY LECS · IN ASSOCIATION WITH CCIY · SUPPORTED BY ASSOCHAM · ENDORSED BY · PARTNER COUNTRY


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org